கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(02.02.2020 - 02 மாசி, 2020 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 225, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2020

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

**விபூதிப்புதன்**
**26.02.2020**
**ஒருசந்தியும், சுத்தபோசனமும் கடைப்பிடிக்க வேண்டும்.**

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.



இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினர் ஜனாதிபதியைச் சந்தித்தனர். இந்நாட்டு கத்தோலிக்க மக்களைத் தாக்கும் பொதுவான பிரச்சனைகளை, அதாவது ஒவ்வொரு ஆயரும் தமது மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை மேன்மைதங்கிய ஜனாதிபதி கோத்தப்பாய ராஜபக்ஷ அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். ஆயர்களின் வேண்டுகோளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். **தகவல் : T. சுனில் பர்னாந்து**

## அறிவித்தல்

கொரோனா வைரஸ் எமது நாட்டிலும் ஊடுருவியிருப்பது தெரியவந்துள்ளதால் அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகளுக்கு தெரிவிக்க விரும்புவதாவது, தேவையேற்படின் எமது கத்தோலிக்க விசுவாசிகளுக்கு முக கவசம் (Face Mask) கொடுத்து இந்நோயிலிருந்து அவர்களை பாதுகாக்க உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தொற்றுநோய் தொடர்ந்து பரவும் பட்சத்தில் மக்கள் ஒன்று திரளும் திருவிழாக்கள், பாடசாலை மட்டத்தில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட வேண்டுமா? என சிந்தித்து செயல்படவும். ஏதேனும் தீர்மானிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

எமது அருட்தந்தையர்களிடம் நான், விசேட செபவழிபாடுகளை ஒழுங்குபடுத்தி புனித மரியன்னையின் பரிந்துரையை வேண்டி இறைவனிடம் மன்றாடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மக்களின் அச்சத்தை போக்கி அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வது எமது கடமையாகும் என அறியத்தருகின்றேன்.

எமது அனைத்து காரியங்களிலும் ஆதரவாக இருக்கும் இறைவனின் நாமத்தில் உங்களை ஆசீர்வதிக்கின்றேன்.

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்டம். 2020.01.28**

## 72வது சுதந்திர தினம்



இறைவனால் சுதந்திரமாக படைக்கப்பட்ட மனிதன் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ இனிவரும் காலங்களில் எமது நாட்டில் இன, மத, பேதமின்றி ஒற்றுமையும் சமாதானமும் கொண்டு வாழவும் இறையாசீரோடு சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

## 28வது உலக நோயாளர் தினம்

**மாசி 11**

**"பெருஞ்சுமை சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"** என்ற கருப்பொருளில் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

## சீனா குறித்து தன் ஆழ்ந்த கவலையை தெரிவித்தார் திருத்தந்தை



சீனாவில் பரவிவரும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக செபிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இந்த தொற்று நோய்க்கு பலியானவர்களை இறைவன் தன் அமைதியில் ஏற்றுக் கொள்வாராக, உறவினர்களை இழந்தவர்களுக்கு ஆறுதலை வழங்குவதுடன், இந்நோயை எதிர்த்து சீன சமூகத்தினால் எடுக்கப்பட்டுவரும் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவையும் வழங்குவாராக என செபித்தார் திருத்தந்தை.



2019ஆம் ஆண்டு ஜனாதிபதி காரியாலயத்தில் நத்தார் கரோல் நிகழ்வுக்காக ஒதுக்கிய ரூபா 30 இலட்சம் நிதியை, மேன்மைதங்கிய ஜனாதிபதி கோத்தாப்பாய ராஜபக்ஷ அவர்கள், பாஸ்கு ஞாயிறு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பயன்படுத்துமாறு அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையிடம் கையளித்தார்.

## திரு இருதயநாதர் ஆலயத்தில் குருமனை திறப்பு




கிருலப்பனை விஜயகுமாரதுங்க மாவத்தையில் அமைந்திருக்கும் திரு இருதயநாதர் ஆலயத்தில் குருமனை திறப்பு விழா 25.01.2020 அன்று கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.


இவ்விழாவில் பங்குதந்தை சமன் மெக்சிமஸ் அடிகளாரும் ஆலய வதிவிட தந்தை பிரதீப் குமார் பர்னாந்து அடிகளாரும் ஆலய பங்குமக்களும் குருமனை திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

**தகவல் : S.G. பிரகாஷ், சக்தி தொலைக்காட்சி**

## குருத்துவ வாழ்வில் 50வது ஆண்டு நிறைவு







கொழும்பு உயர்மறைமாவட்ட அருட்பணியாளர்களான அருட்தந்தை ஹென்றி சில்வா, அருட்தந்தை பிளசிடஸ் த சில்வா, அருட்தந்தை ரீட் செல்டன் பர்னாந்து ஆகியோர் தமது குருத்துவ வாழ்வின் பொன்விழாவை கொண்டாடுகின்றனர். அவர்களுக்கு ஞான ஒளி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறது.

## கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா – 2020

**பங்குனி 6ஆம், 7ஆம் திகதிகளில்**
**6ஆம் திகதி வெள்ளி மாலை - நற்கருணை விழா**
**7ம் திகதி சனி காலை - திருநாள் திருப்பலி**

**தகவல் : குருமுதல்வர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## குருத்துவ வாழ்வில் வைரவிழா காணும் அருட் தந்தை எச்.டீ அன்தனி அடிகளார்.



தனது குருத்துவ வாழ்வின் வைர விழா காணும் எச்.டீ அன்தனி அடிகளார். 1959ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம்திகதி புனித லூசியாள் பேராலயத்தில் மறைந்த அதிமேதகு தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையினால்...

15

**படைகளின் ஆண்டவர் இவர். இவரே மாட்சிமிகு மன்னர். (தி.பா 24)**

# கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா!

கடந்த வாரம் புனித செபஸ்தியார் திருவிழாவை முன்னிட்டு, பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்ற திருவிழாத்திருப்பலி மறையுரையின் போது, பாஸ்கு ஞாயிறு அன்று நடந்த பாரிய இழப்பு பற்றி விசாரணை செய்யுமாறும், ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவிடம் பாரிய அனர்த்தம் பற்றிய அறிக்கையை வெளிப்படுத்துமாறும், இந்த அனர்த்தத்திற்கு உதவிய, பொறுப்பாக இருந்த அனைவரையும் பக்கசார்பற்று விசாரணை செய்து அறிக்கையை வெளிப்படுத்தி நீதி நியாயத்தைப் பெற்றுத்தருமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நடந்த அனர்த்தத்தினால் இன்றும் நாம் வேதனைகளை அனுபவிக்கிறோம். பிரிந்த எமது உறவுகளை அன்புடன் நினைவு கூர்கிறோம். அவர்களுக்காக செபிப்போம். எம்மத்தியில் அனர்த்தத்தினால் துன்புறும் மக்களுக்கு தொடர்ந்து உதவி பராமரிப்போம் என்றார்.

இந்நிகழ்வில் நீர்கொழும்பு மறை பிராந்திய குருமுதல்வர் உட்பட, நீர்கொழும்பு, போலவலான,



கட்டானை இயக்குனர்களும் கலந்துக் கொண்டனர். கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலய பங்கு தந்தை மஞ்சுல நிரோசன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**



கடந்த வாரம் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில், சிலாபம் மறைமாவட்ட ஆயர் மேதகு. வெலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையும், கொழும்பு பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும், சிலாபம் மறைமாவட்ட பங்குத்தந்தையர்கள், சிலாபம் மறைமாவட்ட மக்கள் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து, சிலாபம் துரைச்சோலை வெப்ப மின் உற்பத்தி மையத்தின் சூழ பிரதேச வாசிகளின் இக்கட்டான நிலையைத் தீர்க்குமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மேன்மைதங்கிய ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ அவர்கள், இப்பிரச்சினைக்கு, தான் நடுநிலைவகித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதாக வாக்களித்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**



நாயக்ககந்தை புனித காணிக்கை மாதா அன்னை பங்கின் தமிழ், சிங்கள, ஆங்கில மறைக்கல்வி ஆசிரியர்களை ஒன்றாக இணைந்து 05.01.2020 அன்று கிறில்ல விஜே விடுமுறை உணவகத்திற்கு அழைத்துச் சென்று, இறை ஞானத்தைப் பயன்படுத்தி வாழ வேண்டிய விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தி, இயற்கை நீர் வீழ்ச்சியுடன் கூடிய அருவியில் நீராடவும், பக்தி நிறைந்த மும்மொழி திருப்பலியில் பங்கெடுக்கவும் செய்த பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அவர்களையும், அருட்சகோதரி. விக்டோரியா அவர்களையும், கலந்து மகிழ்ந்த தமிழ்ப்பிரிவு மறைக்கல்வி ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. ஜோன்.**





கொழும்பு உயர்மறைமாவட்ட வருடாந்த நத்தார் தமிழ் கரோல் கீதப் போட்டியில் 4 தடவைகள் தொடர்ந்து வெற்றியீட்டிய நாயக்ககந்தை புனித காணிக்கை மாதா பங்கின் திருப்பாலத்துவ சபை சிறுவர்களை ஊக்குவித்து மகிழ்விக்கும் பொருட்டு, பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அவர்களின் அனுசரணையில் 10.01.2020 காலி நகருக்கு சுற்றுலா சென்றபோது மகிழும் மாணவர்களையும் ஊக்குவிப்பாளர்களாகிய திருமதி. ஜோன், திருமதி. டயஸ், செல்வி கீர்த்திகாவையும் தேவையேற்படும் போது விஞ்ஞான ஆசிரியை ஸ்டேலா ரவீந்திரநாதனையும், செல்வி. கெனிஸ்டாவையும் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. ஜோன்.**

# கந்தானை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா




கடந்த ஞாயிறு 20ம் திகதி தை மாதம் 2020ம் ஆண்டு கந்தானை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழாவில் துணை ஆயர் மேதகு. ஜே. டி. அன்தனி ஆண்டகையின் மறையுறையின் போது, விசுவாசிகள் திருவிழா என்றதும் உண்டு, குடித்து, புதிய ஆடைகளை அணிந்து இன்புறும் காலமல்ல இது. மாறாக தமது ஆன்மாவை மீள்பரிசீலனை செய்து புதிய நிலைக்கு கொண்டு வரும் காலமே இது என குறிப்பிட்டார். உங்கள் பங்கு தேவாலயமான புனித செபஸ்தியாரின் வாழ்க்கையை சிந்தித்துப் பார்த்தால், அவரின் விசுவாச வாழ்க்கைக்கு பலவிதமான தடைகள் ஏற்பட்டும் மனந்தளராது சாட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர். அவரின் இந்த உறுதியான விசுவாச வாழ்க்கை முறை எமது வாழ்க்கையில் விசுவாசத்தில் உறுதிப்பெற அவரின் சாட்சிய வாழ்வை வாழ்ந்து எம்மை சக்திப்படுத்திக்கொள்ள நாம் அனைவரும் முன்வர வேண்டும். கந்தானை பங்கு தந்தை அருட்பணி நிசாந்த றொட்றிக்கோ அடிகளாரும் உதவி பங்குத்தந்தையர்களும் பங்கு மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**


# ஆயர் திருநிலைப்படுத்தலின் ஆண்டு விழா.



மேதகு ஆயர். நோபட் எம் அந்திராடி (அ.ம.தி) ஆண்டகை
10.01.2020



மேதகு ஆயர். மேரியஸ் பீரிஸ் ஆண்டகை
03.02.2020



மேதகு ஆயர். மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை
11.02.2020



மேதகு ஆயர். இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை
11.02.2020

தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் நினைவு நாளை இவ்வாயர்கள் நினைவுகூறுகின்றனர். இவர்கள் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.

# 39ம் ஆண்டு நிறைவு விழா



நீண்டதொரு விசுவாசப் பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்டுள்ள மன்னார் மறைமாவட்டம், தன்னாட்சிப் பணிக்கான ஒரு மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டதன் 39ம் ஆண்டு நிறைவு விழா நேற்று 2020.01.25 சனிக்கிழமை தோட்டவெளி புனித மறைசாட்சியர் அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை மன்னார் மறைசாட்சிகளின் விதைகுழித் தோட்டத்தில் சில நிமிடங்கள் செபித்தபின் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.



மொறட்டுவ புனித செபஸ்தியார் ஆலயத்தின் 145வது வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற மாலை ஆராதனையை கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனரும், ஞானார்த்த பிரதீபய மற்றும் மெசஞ்சர் பத்திரிகையின் ஆசிரியருமான கலாநிதி. அருட்பணி. கமிலஸ் பர்னாந்து அடிகளார் தலைமை தாங்கி வழிநடத்தினார். இவருடன் பங்குத்தந்தை. லலித் பீலிகஸ் பெரேரா அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
02 மாசி, 2020 ஞாயிற்றுக்கிழமை.

# "சுதந்திரம் என்பது பிறப்புரிமை அது இறைவன் நமக்களித்த வரம்."

"சுதந்திரம் என்பது பிறப்புரிமை அது இறைவன் நமக்களித்த வரம். காரணம் இறைவன் மனிதனை முழு சுதந்திர மனிதனாகவே படைத்திருக்கின்றார். மனிதனும் ஒரு சுதந்திர விரும்பி. அவனும் சுதந்திரமாகவே வாழ ஆசைப்படுகின்றான்". இதனடிப்படையில் எமது இலங்கை மக்களும் ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் 4ஆம் திகதியை நம் இலங்கை நாட்டின் சுதந்திர தின விழாவாக கொண்டாடுகின்றனர்.

எமது நாடு 72வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் நாட்டையும், நாட்டு மக்களையும் இலங்கையின் அன்னையின் பாதத்தில் ஒப்படைக்கின்றேன். அத்தோடு எமது நாட்டில் அமைதி உருவாகவும், வளங்கள் பெருகவும், நாட்டின் அனைத்து மக்களும் சகோதரத்துடன் வாழவும் அன்னையிடம் வேண்டிநிற்கின்றேன். உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இம்மாதம் 2ஆம் திகதி நாம் இயேசுவை கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கும் விழாவைக் கொண்டாடுகின்றோம். இவ்விழாவானது பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் மெசியா ஆலயத்தில் தோன்றி தம்மை வெளிப்படுத்தும்போது ஆலயம் இறைமகிமையால் மிளிரும் என்று உரைத்தார்கள். இயேசு தந்தையின் இல்லத்தில் நுழையும்போது, அந்த இறைவாக்குகள் நிறைவெய்துகின்றன. இயேசு ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு மோசேயின் சட்டப்படி இறைவனுக்கு காணிக்கையாக்கப்படுகிறார். ஏனெனில் சட்டப்படி "ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்" (லூக் 2:23). இரு மாடப் புறாக்களைக் கொடுத்து அர்ப்பணிக்கப்பட்ட பாலன் இயேசு மீட்கப்படுகின்றார் என்பதை இவ்விழா எமக்கு எடுத்துரைக்கின்றது.

அத்தோடு இம்மாதம் 11ஆம் திகதி லூர்து அன்னையின் திருவிழாவையும் நினைவுகூர்கின்றோம். 1858ஆம் ஆண்டு மாசித் திங்கள் 11ஆம் நாள் வியாழன் மதியம், 12 மணிக்கு மேல் அன்னை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூர்து நகரையடுத்த மசபியேல் எனும் குகையில் 14 வயது நிரம்பிய பெர்னதெத் சுபிரூ எனும் பாமரச் சிறுமிக்கு காட்சி அளித்தாள். "இளமைத் தோற்றத்துடன் மரியா, மிக அழகானவராகக் காணப்பட்டார். கையில் ஒரு செபமாலை இருந்ததையும், தனக்கு வாழ்த்துக் கூறி தம்முடன் செபிக்க அழைத்தையும் பெர்னதெத் கூறினாள். "நாமே அமல உற்பவம்" என்று தன்னை வெளிப்படுத்தி கிறிஸ்துவின் குணமளிக்கும் பணியில் தனக்கும் ஆர்வம் உண்டு, என்பதைக் காட்டும் வண்ணம் நீருற்றைச் சுட்டிக் காட்டி அதில் வழிந்த நீரைக் குடிக்கச் சொல்லி மருந்துவர்கள் குணமாக்க முடியாத நோய்களையும் கூட குணமாகினாள் அன்னை மரியா. ஆகவே அன்னையில் நம்பிக்கையுள்ளவர்களாக இன்று உலகமெங்கும் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்கள் அனைவரும் விடுபடவும், தாக்கத்திற்குள்ளானவர்கள் குணம்பெறவும் மன்றாடுவோம். எமது தேவைகளையும், நோய், நொடிகளையும். விண்ணப்பங்களையும், வேண்டுதலையும், செபமாலை சொல்வதன் வழியாக அவர் பாதம் கேட்டு நிற்போம்.

இறையாசீருடன் ஆசிரியர்

மோயீசனின் சட்டப்படி ஒரு தாய் ஆண் குழந்தையை பெற்றெடுக்கும் போது ஏழு நாள் விலக்கு இருந்து எட்டாம் நாள் அக்குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும். அதைத் தொடர்ந்து உதிரத் தீட்டு முடியும் வரை 33 நாள்களும், தூய பொருள்களைத் தொடாமல் இருக்க வேண்டும். பெற்றெடுக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் இரண்டு வாரம், விலக்கு இருப்பதுடன் பின்பு 66 நாள்கள் உதிரத்தீட்டு முடியும் வரை தூய்மையான எதையும் தொடாமல் இருக்கவேண்டும்.

காலக்கேடு முடிந்த பிறகு ஓராண்டு நிறைவுற்ற செம்மறி ஒன்றை எரிபலியாகவும், புறாக்குஞ்சு அல்லது காட்டுப்புறா ஒன்றைப் பாவம் போக்கும் பலியாகவும், குருவிடம் கொடுக்க வேண்டும். அவர் அதனை ஆண்டவர் திருமுன் கொண்டு வந்து காணிக்கையாக்கி குழந்தை பெற்றெடுத்த பெண்ணின், இரத்தத்

## இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தல்




தீட்டை நீக்குவார். ஆட்டுக்குட்டியை கொண்டு வர இயலாதவர்கள் இரண்டு காட்டுப் புறாக்களை அல்லது இரண்டு புறாக் குஞ்சுகளைக் கொண்டு வந்து ஒன்றை எரிபலியாகவும், மற்றதை பாவம் போக்கும் பலியாகவும், ஒப்புக்கொடுப்பது வழக்கம் (வேலி 12:2-8)

மேலும் மனிதரானாலும், விலங்குகளானாலும், தலைமைப் பேரானவை அனைத்தும் ஆண்டவருக்கே உரியது. ஆயினும் மனிதரில் தலைப்பேரானவைகளை ஈடுகொடுத்து மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதும் விதிமுறைகளுள் ஒன்று. (எண் 18:15)

அதன்படி மோயீசனின் சட்டத்தை நிறைவேற்ற இயேசுவைக் கோவிலில் அர்ப்பணிக்க மற்றும் தானும் தூய்மையாகும் பொருட்டு அன்னை மரியா ஆலயத்திற்குச் சென்றார். எனவே இந்த விழாவை தூய கன்னி மரியாளின் தூய்மைச் சடங்கு விழா என்றும் அழைப்பது உண்டு. மேலும் அன்னையும், ஆண்டவரும் சிமியோனையும், அன்னாவையும் சந்திக்கும் விழா என கிரேக்கர்கள் இதனை அழைக்கின்றனர். இறைமகனின் ஆலய வருகை என அமெரிக்கர்கள் அழைக்கின்றனர்.

இவ்விழா தொடக்க திருச்சபையில் எருசலேமில் கொண்டாடப்பட்டது. எஜேரியா என்ற துறவி 400ஆம் ஆண்டு எருசலேம் சென்றபோது இந்த விழா மிகவும், பக்தியுடனும், உற்சாகத்துடனும், கொண்டாடப்பட்டதாகக் கூறியுள்ளார்.

கொன்ஸ்சாந்திநோபிள் நகரில் பிளேக் நோய் வேகமாகப் பரவிட மக்களைக் கொன்றழித்தபோது ஆண்டவரின் அபரிமிதமான அன்பினால் அந்நோய் முற்றிலுமாக நீங்கியது. இதற்கு நன்றி செலுத்தும் முகமாக பேரரசர் முதலாம் ஜஸ்டின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்விழாவை அறிமுகப்படுத்தினார்.

இன்று பொதுவாக எல்லா நாடுகளிலும் இவ்விழா மாசி மாதம் 2ஆம் திகமி கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் குழந்தைகளை ஆலயங்களுக்கு எடுத்துச் சென்று மெழுகுத் திரியைப் பற்ற வைத்து காணிக்கையாக்குகிறார்கள். குழந்தையை திருப்பலியில் பங்கெடுத்து இறைவனின் பிள்ளையாக ஒப்புக்கொடுக்கிறார்கள். இறைபராமரிப்பிலும் குழந்தை வளரவேண்டும் என்று பெற்றோர்கள் இவ்விழாவில் பங்கெடுக்கின்றனர்.

எல்லா குழந்தைகளும் நமது குழந்தைகள், நமது குழந்தைகள் எல்லாமே முதலில் கடவுளுடைய குழந்தைகள் என்பதை நாம் உணரவேண்டும். எனவே கடவுள் நமக்கு கொடுத்திருக்கின்ற குழந்தைகளை அவருக்கு அர்ப்பணித்து அடையாள முறையில் கடவுளுக்கு விலை கொடுத்து வாங்கி காணிக்கை கொடுத்து வாங்கிட அந்த குழந்தைகளை நமது குழந்தையாக வளர்க்க வேண்டும் என்று காட்டுவதுதான். ஆண்டவரைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த அந்த நிகழ்ச்சி, குழந்தைகளை காணிக்கையாக்கும் போது இறைவனுக்கு பதிலாக, இறைவனுடைய சார்பில், இறைவன் வளர்ப்பது போல வளர்ப்போம்.. 15

"என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன். மதிப்பு மிக்கவன்."
(எசா 43:4)


## உண்மை உறைக்கும்



2010 - 2020
ஞான ஒளி
GNANA OLI
இளைஞர் ஆண்டு - 2020

# கிறிஸ்து வாழ்கிறார்!

சகோ. செ. தொபியாஸ் CMSF, சிலாபம்.



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வெளியிடப்பட்ட "கிறிஸ்து வாழ்கிறார்" என்பதை மையப்படுத்தி கொழும்பு உயர்மறைமாவட்டம் தற்கால நவீன இளைஞர் சமூகத்திற்காக இவ்வாண்டை இளைஞர் ஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கிறது. 2020, இருபது இருபது 'Twenty Twenty' என்றாலே ஒரு இளமைத் துடிப்பு தொனியில் ஏற்படுகின்றது. இவ்வாண்டை இளையோருக்கு அர்ப்பணிக்கும் வேளையில் இறையாட்சியைக் கட்டியெழுப்பவும், இறையரசைப் பரப்பவும் இறைவனின் ஆசீர் நிறைந்த ஆண்டாகவும் புதிய ஏற்பாட்டில் **நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தேன்: அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார்** (புனித மாற்கு 1:8) காணும் திருமுழுக்கு யோவான் சுட்டிக்காட்டிய வாழ்க்கை முறையில் நமது இளம் சமூகம் (இளைஞர்) பாதைகள் நேராக்கப்பட வேண்டும். நேர்மையான பாதைகள் அமைத்துக் கொள்கின்ற பொழுது இறைவனின் வருகையும் உடனிருப்பும் (சாமுவேல் 3:19), **சாமுவேல் வளர்ந்தார். ஆண்டவர் அவரோடு இருந்தார்; ரபி நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" வந்து வாருங்கள்;** (யோவான் 1:35-42). அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். இதன் அடிப்படையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கிறிஸ்து வாழ்கிறார்" எனும் திருத்தூது ஊக்கவுரையில் 'இளைஞர்களுக்கு முதன்மையான ஆதாரத்தளமாக தொடர்ந்து குடும்பமே விளங்குகிறது. (கி.வா262) என்கிறார். எனவே ஒவ்வொரு குடும்பமும் இறை பிரசன்னத்தில் வாழ்வதும், இறை பிரசன்னம் நம்மில் நிறைந்திருப்பதும் ஒன்றுதான். **எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு, ஆனால் எல்லாம் நன்மை தரக்கூடியவை யல்ல. எல்லாவற்றையும்.......** (1கொரி 6:12-17) அப்போதுதான் தீமைகளைக் களைந்து இறைவனின் திருவுளத்திற்கு அர்ப்பணித்து வாழ இளைஞர்கள் அழைக்கப்படுவதையும் அதனால் அமைதியை நலமான வாழ்வை உண்மையான மதிப்பீடுகள் நிறைந்த வாழ்வை கண்டு கொள்ள முடியும். **'காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்து விட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்** (புனித மாற்கு 1:15).

இறைமகன் இயேசு தனது முப்பது வயதில் சமூகத்தில் பொதுப்பணி வாழ்வை தொடங்கியபோது அவரிடம் காணப்பட்ட புரட்சியான செயற்பாடு, இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சவாலாகவும், முன்மாதிரியாகவும் விளங்கியது. இளைஞர்கள் துடிப்புள்ளவர்கள் எதையும் சாதிக்கும் திறன் படைத்தவர்கள். நினைத்ததை முடிக்கும் ஆற்றல் உள்ளவர்கள். அவர்களின் ஒரே வழிகாட்டிதான் நம் ஆண்டவர் இயேசு. தமது நற்செய்திப் பணி வாழ்வை இளைஞராகத் தொடங்கிய போது இளைய சமுதாயத்தை மையமாக வைத்தே செயற்பட்டார். இன்றைய யதார்த்தம் என்னவென்றால்.....

**'கொள்கை இல்லாத அரசியல்.**
**உழைப்பில்லாத செல்வம் [வெளிநாட்டு வரவு]**
**ஒழுக்கம் இல்லாத கல்வி,**
**அறநெறி இல்லாத அமைப்பு,**
**மனிதம் இல்லாத அறிவியல்,**
**தியாகம் இல்லாத வழிபாடு,**

என்ற அதீத சமூகத்தின் தத்துவத்தை தகர்த்தெறிந்து மாற்றுச் சமூகத்தை உருவாக்கும் புதிய கொள்கைகளை வடிவமைத்துக்கொடுக்க இவ் இளைஞர்களால் மட்டுமே முடியும். ஆனால் அதற்குச் சமூகம் 'தீவிரவாதி' என்று பட்டம் சூட்டி சமாதி கட்டிவிடும். அதையும் பொருட்படுத்தாது 'மனிதமேம்பாட்டு வளர்ச்சியை நோக்கி தேசத்தின் தலைவிதியை மாற்றிக் காட்டுவேன் என்று ஆட்டிப்படைக்கும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். (குறிப்பாக ஆன்மீக வளர்ச்சி முக்கியமாக இருக்க வேண்டும்)

ஆன்மீகம் என்பது இளைஞரை ஒரு அகபுறத் தேடலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாளைய சமுதாயம் அர்த்தமுள்ள ஆன்மீக வழிமுறைகளால் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

திராட்சைக் கொடியுடன் இணைந்த கிளைபோன்று கிறிஸ்துவுடன் இணைந்து நற்பலன் கொடுக்க (புனித யோவா15:5) **நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்"** (புனித யோவா 15:6) எனவே **நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாக பெறும்பொருட்டு வந்துள்ளேன்"** (புனித யோவா 10:10) என்கின்றார் இயேசு ஆண்டவர்.



**இளைஞனே! ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை என்பதை உணர்ந்து வாழ் ! புதுவாழ்வு காண்பாய்! புதுயுகம் படைப்பாய் !**

---

# இறையடியார் பீ.ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காகச் செபிப்போம்!

யாழ் ஆயர்



26 தை 2020ம் ஆண்டு இறையடியார் பீ. ஏ. தோமஸ் அடிகளாரின் இறப்பின் 56வது ஆண்டின் நிறைவுத் தினமாகும். இந்த தினத்தோடு இறையடியார் பீ. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் எப்போது நிகழும் என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு நல்ல செய்தி கிடைத்துள்ளது. 18.ஜனவரி 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் இறையடியார் பீ. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் நிகழ்வு பற்றிய விடயங்களை முடிவுக்குக் கொண்டு வரும் கூட்டம் யாழ் ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் முக்கிய பிரமுரராக ரோமாபுரியின் பீ. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பாக செயல்படும் றோலன் அடிகளார் மற்றும் இலங்கையில் தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பாக செயல்படும் ஏ. ஸ்டீபன் அடிகளாரும் கலந்துக்கொண்டார்கள். இக்கூட்டத்தின் ஆயர் அவர்கள் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக செபிக்குமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்தார். முன்னால் யாழ் ஆயரிடம் அச்சேற்ற அனுமதிப்பெறப்பட்ட செபத்தை செபிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டது. ஏற்கனவே அனுப்பப்பட்ட புதுமைகள் பற்றிய விபரம் பொதுவானதாகவும் விபரம் குறைந்ததாகவும் இருந்தமையால் திரும்பவும் அவர்கள் அழைக்கப்பட்டு மேலும் தகவல்கள் திரட்டப்பட்டு, றோலன் அடிகளார் ரோமாபுரிக்கு எடுத்துச் சென்று பொறுப்பான கர்தினாலிடம் ஒப்படைக்கப்பட்டு, பெற்றுக்கொண்ட பதிலும் கிடைக்கப்பட்டுள்ளது.

இறையடியார் பீ. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கான செயல்பாடுகள் விரைவு செய்யப்பட்ட நிலையில் அவரின் புனிதர் பட்டத்திற்காக செபிக்க எல்லா மறைமாவட்டங்களிலும் ஆயர்கள் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**இறையடியார் பீ. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கான மன்றாட்டு**

எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளே! உமது தாசனாகிய அருட் திரு தோமஸ் அடிகள் இவ்வுலகில் வாழ்ந்தபோது பரம திருத்துவத்தின் ஆலயமாகவும் தூய ஆவியின் நிறைவாகவும் வாழ்ந்து வந்தாரே. தமது வாழ்நாள் முழுவதும் தாழ்ச்சி மிக்கவராக விலங்கியதுடன் தம்மை அண்டியவர்களையும் தாழ்ச்சியைக் கடைப்பிடிக்க தூண்டி வந்தாரே! திவ்விய நற்கருணை பக்தியை மையமாக வைத்து செபமாலை தாசர் சபையை ஸ்தாபித்தாரே. பரிசுத்த தேவதாயின் மீளா அடிமையாக தம்மை ஒப்புக்கொடுத்தவரே. அவருடைய புண்ணிய வாழ்வை முன்னிட்டு அவர் நாமத்தால் அடியேன் உம்மிடம் இரந்து கேட்கும் இந்த மன்றாட்டை பெற்றுக்கொள்ள கருணை புரியும்படி உம்மை தாழ்மையுடன் வேண்டிக்கொள்றேன்.

அன்பான தந்தையே! உமதுதிருக்குமாரன் இயேசு கிறிஸ்துவின் திருச்சபையின் புனிதர்களில் இவரையும் ஒருவராக சேர்த்துக்கொள்ள உதவும் படியாக நான் கேட்கும் மன்றாட்டை எனக்கு அருள அவரை இவ்வுலகில் மகிமைப்படுத்தும்படி உம்மை பக்தி வைராக்கியத்துடன் பிரார்த்திக்கிறேன்.

**1 பர, 1 அருள். 1 திரி.**

**குறிப்பு:**

**கேட்டவரம் கிடைத்தவர்கள் உங்கள் முகவரியுடன் கீழ் காணும் முகவரிக்கு அறியத்தரவும்.**

**பரிசுத்த செபமாலை மாதாவே! உமது தாசனாகிய அருட்திரு பீ. ஏ. தோமஸ் அடிகளாரை இவ்வுலகில் மகிமைப்படுத்தியருளும்.**

**அருள் ஆச்சிரமம்,**
**இல. 05, றெம்பிள் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**செபமாலை தாசர் மாகாண இல்லம்,**
**புனித ஜோசப் ஆச்சிரமம்,**
**உசன் மிருசுவில்.**

---

## கலாநிதி அருட்தந்தை பேனாட் சாந்த அடிகளார் ராகிங் மறுப்பு குழுவில்!



பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் ராகிங்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க உயர் கல்வி அமைச்சு ஏழுபேர் அடங்கிய குழுவை நியமித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் முன்னால் தலைமை நீதிபதி கலாநிதி சலீம் மார்ஷப் தலைமையிலான் குழுவில் உறுப்பினர்களாக ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னால் உபவேந்தர் கலாநிதி நாரத வர்ணகுலசூரிய, ஊவா பல்கலைக்கழக முன்னால் உபவேந்தர் கலாநிதி சந்திரா அபுல்தெனிய, ஜனாதிபதி ஆலோசகர் பிரசன்ன லால் த அல்விஸ், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் ஜனித்தா லியனகே,


தொடர்ச்சி 15ம் பக்கம்

**அறிவித்தல்:**

**கிறிஸ்தவ விவகார துறை**

கிறிஸ்தவ மத விவகார துறை 1ம்திகதி பெப்ரவரி மாதம் 2020ம் ஆண்டிலிருந்து இல. 16/1, குரோல் அவன்யூ, கோட்டே வீதி, பொரல்லை,கொழும்பு - 08 என்ற முகவரியில் அமைந்துள்ள இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது, ஆயினும் எமது தொலைபேசி இலக்கம் மாற்றப்படவில்லை என்பதை அறியத் தருகிறேன்.

# இலங்கையின் 72வது சுதந்திர தினம்



18ம் நூற்றாண்டினைச் சேர்ந்த பிரேஞ்சு தத்துவ அறிஞர் ரூஸோ என்பவர் சுதந்திர மனிதனைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார். "சுதந்திரமாக பிறந்த மனிதனை எங்கு நோக்கினும் அடிமைச் சங்கிலியில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றான்." இந்த வார்த்தைகள் இன்றைய மனித வாழ்வின் எதார்த்த நிலையினை எடுத்தியம்புவதாக இருக்கின்றது. சுதந்திரம் அல்லது விடுதலை வாழ்வு என்பது மனித இனம் கொண்டிருக்கும் மாபெரும் சிறப்புக்களில் ஒன்று. அந்த விடுதலையானது தம்மிடமுள்ள அதிகாரத்தை மற்றவரிடம் கொடுப்பது விடுதலையல்ல, மாறாக அடிப்படையில் மாற்றம் காண்பதே உண்மையான விடுதலையாகும்.

இன்று எமது சுதந்திர இலங்கை நாட்டின் 72வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றோம். முத்துக்களாலும் இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்ட கண்ணாடி மாளிகை. சலவைக் கற்களால் கட்டப்பட்ட அழகிய தூண்கள், கண்ணைப்பறிக்கும் கண்ணாடி சுவர்கள், குளிர்ச்சியான அறைகள், இரவில் எண்ணெயை தின்றுவிட்டு ஆவியைப் பறக்கவிடும் அழகிய அகல் விளக்குகள், இடுப்பில் கச்சைக்கட்டிப் பணிபுரியும் பணியாளர்கள், இதயத்தை வருடிச் செல்லும் இதமான தென்றல் காற்று, மலர்ந்து மனம் வீசி மனதைக் கொள்ளைக் கொள்ளும் மலர்கள். அந்த அரண்மனையில் பாட்டு உண்டு, பரதம் உண்டு, மயில் உண்டு, குயில் உண்டு, ஆனால் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிற மன்னனின் மனதில் மட்டும் மகிழ்ச்சியில்லை. காரணம் மனிதர்களை மதிக்காத மனநிலை, எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்கிற தற்பெருமை, தான்மட்டும் வளரவேண்டும் என்ற சுயநலம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்காத மனநிலை எல்லா வசதிகளும், வாய்ப்புகளும், வளங்களும் இருந்தும் மனதில் மட்டும் நிம்மதி இல்லை. எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? என்று தேடிப்பார்த்தேன் அது எங்கேயும் இல்லை. யார் யாரோ வந்தாங்க என்னென்னமோ சொன்னாங்க. என்னத்த சொல்லி, என்னத்த பண்ண, எனக்கு இங்கு நிம்மதியில்ல என்று புலம்பினான். பக்கத்து நாட்டுப் போர் வீரர்கள் படையெடுத்து வந்து என்னை அடிமைப்படுத்திவிடுவார்களோ? என்ற பயம் அவனைத் தொற்றிக்கொண்டது. காலப்போக்கில் கவலைகள் இமயமலைபோல் உயர்ந்துகொண்டே சென்றன. உடல் மெலிந்து, உண்ண முடியாமல், உறங்கமுடியாமல் உள்ளத்தில் ஊனமுற்றவனாகப் படுத்தப்படுக்கையாகிவிட்டான். சிறந்த மருத்துவன் வந்து பார்த்து உடலில் எந்த நோயும் இல்லை. இவருக்கு மனநோய் மட்டுமே இருக்கிறது என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். ஒரு துறவி அரண்மனைப் பக்கம் வந்தார். அவரிடம் சொன்னபோது மன்னனைப் பார்த்துவிட்டு இவரின் நோயைக் குணப்படுத்திவிடலாம் என்று சொன்னவுடன் அரண்மனை முழுவதும் மகிழ்ச்சி கொண்டது. மேலும் இந்த மனநோய் நீங்க வேண்டுமானால் இந்த நாட்டில் எந்தக் கவலையும் இல்லாமல் எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனின் சட்டையை ஒரு வாரம் அணிந்தால் குணமாகும் என்றார். படைவீரர்களும், பணியாளர்களும் மகிழ்ச்சியாக இருக்கும் மனிதனைத் தேடி நாட்டுக்குள் சென்றனர். முதலில் ஒரு தெருவில் நுழைந்தார்கள். அத்தெரு சாதிச்சண்டையால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு இரத்தக்களமாக மாறிக் கொண்டிருநத்து. அங்கு மகிழ்ச்சியாகச் சட்டை அணிந்த மனிதன் ஒருவனும் இல்லை. சற்று தூரம் சென்று பார்த்தால் தண்ணீர்க் குழாயில் பெண்கள் ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசி, குடத்தால் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டவர்கள் இங்கேயும் மகிழ்ச்சியான மனிதன் இல்லை. அந்த இடத்தைக் கடந்து சென்ற போது ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒருவர்மேல் ஒருவர் சந்தேகப்பட்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இங்கேயும் மகிழ்ச்சியான மனிதன் இல்லை. அந்த ஊருக்குள் சென்றபோது ஒரே அழுகுரல். ஏன் அழுகிறார்கள்? என்று ஒருவனை அழைத்துக் கேட்டபோது சென்றமாதம் குடிவந்தார்கள். ஒரு வாரத்திற்குள் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை தொடர்ந்தது. இவர்கள் விரும்பி, அன்பு செய்து காதல் திருமணம் செய்து கொண்டவர்களாம். மனைவிக்கு கணவன் மேல் தேவையில்லாத சந்தேகம் வரத்தொடங்கியது கணவன் பலமுறை சொல்லியும் மனைவி ஏற்றுக்கொள்ளவில்லை.

என்னை நம்பு, சந்தேகப்படாதே, அடுத்தவர்கள் தவறாகச் சொல்வதையும் கேட்காதே. உன் கல்லான மனதை மாற்றிக்கொள். மனதில் தேவையில்லாததை நினைத்துக் கொண்டு என்னோடு தினம் சண்டை போடாதே என்று சொல்லியும் அவள் கேட்கவில்லை. நேற்று இரவு நடந்த சண்டையில் உன்னோடு வாழ்ந்தால் எனக்கு நிம்மதி கிடைக்காது. உனது சந்தேகத்தைத் தீர்க்கவும் முடியாது. உன் மனதை மாற்றிக்கொள்ளவும் மட்டாய் என்று வெறுத்துப்போன அவன் மருந்து குடித்து இறந்துபோனான்.

இங்கேயும் மகிழ்ச்சியான மனிதன் இல்லை. சற்றுதூரம் சென்று பார்த்தபோது பிள்ளைகளுக்குச் சரியாக உயில் எழுதி வைக்காமல் தந்தையானவர் இறந்துவிட்டார். சொத்துப் பிரிக்கும் பிரச்சனையில் அண்ணனும், தம்பியும் வீதியில் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். இங்கேயும் மகிழ்ச்சியான மனிதன் இல்லை. சரி இங்கு இருக்கும் ஆசிரமத்துக்குச் செல்வோம். அங்குதான் அமைதியும் மகிழ்ச்சியும் உள்ள துறவிகள் இருப்பார்கள் என நினைத்து ஆசிரமத்தின் வாயிலை அடைந்தார்கள். சென்றவாரம் திடீரென இறந்து போனார் ஆசிரமத்தின் தலைமைத் துறவி. அடுத்தது யார் தலைமை பதவி பெறுவது என்ற சண்டையில் சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள்.

இங்கேயும் மகிழ்ச்சியாகச் சட்டை அணிந்த மனிதன் இல்லை. மகிழ்ச்சியான மனிதன் ஒருவனும் இல்லையே, என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு அரண்மனை நோக்கி வந்து கொண்டிருந்தபோது எதிரே ஒரு விவசாயி சந்தோஷமாக பாட்டுப்பாடிக் கொண்டு ஏர்மாட்டை ஓட்டிக்கொண்டு வந்து கொண்டிருந்தான். அவன் மகிழ்ச்சியாக வந்தானே தவிர உடம்பில் சட்டையில்லை. வேஷ்டியும் துண்டும் அணிந்திருந்தான். சட்டை இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று நினைத்து அந்த மகிழ்ச்சியான விவசாயியை அரண்மனைக்கு அழைத்து வந்தனர். அரண்மனை அடைந்த விவசாயி மன்னனைப் பார்த்துச் சட்டைபோடும் அளவுக்கு எனக்கு வசதியில்லை. ஆனால் கவலையில்லாமல் அன்றாட வேலைகளைச் செய்துகொண்டு மனைவி பிள்ளைகளோடு எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். தேவையில்லாததை நினைத்துக் கவலை கொள்வதில்லை. யாரையும் ஏமாற்றுவதும் இல்லை. உங்களுக்கு விருப்பம் இருந்தால் எனது துண்டைப் போட்டுக் கொள்ளுங்கள் என்றான். இதைக்கேட்ட மன்னன் மனநோய் நீங்கி யாரையாவது ஏமாற்றிப் பெற்றிருந்தால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

இனி பசிக்கு உணவு கொடுப்பேன். செல்வத்தைப் பகிர்ந்து கொடுப்பேன். ஏழைகளை அன்பு செய்வேன். ஆணவத்தை நீக்கி அன்பை ஆடையாக அணிந்து கொள்வேன். பகட்டான ஆடையைக் களைந்து, பருத்தி ஆடை அணிந்து கொள்வேன். யாரையும் அடிமையாக்காமல் சுதந்திரமாக வாழ வழிவகுப்பேன் என்றார். சக்கேயு "ஆண்டவரே என் உடமையில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். எவனையாவது ஏமாற்றிப் பெற்றிருந்தால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்." (லூக் 19:8)

நமக்கு விடுக்கும் விடுதலைச் செய்தி சுதந்திர நாட்டில் அடிமைத்தன்மையின் ஆணிவேரைக் களைவதாகும். அடிமரத்தின் வேரில் இருக்கும் பூச்சிகளைக் களையாமல் கிளைகளுக்கு மருந்தடிப்பது விடுதலை அன்று. ஒருவன் தன்னிடம் இருக்கும் அதிகாரத்தை அடுத்தவன் கையில் கொடுப்பது உண்மைச் சுதந்திரம் அன்று. மாறாக அடிப்படையில் மாற்றம் உதயமாகி அது சமூகத்தில் தழைத்துக் காயாகிக், கனியாகிப் பயன்தருவதே விடுதலையாகும். இருப்பதை பதுக்குவது விடுதலை அல்ல. பகிர்வதே உண்மை விடுதலை. அடிமைப்படுத்துவது விடுதலை அன்று. அடிமையை தலைதூக்க வைப்பதே விடுதலை. "எங்கே பகிரப்படாமல் அளவுக்கு அதிகமாகச் சேர்த்து வைக்கப்படுகிறதோ அங்கே பாவம் கூடுகட்டத் தொடங்குகிறது"

சுதந்திரம் பெற்ற நன்நாளில் பலரின் உள்ளங்களை அமாவாசைபோல் இருட்டு இறுக்கமாகத் தழுவிக் கொள்கிறது. வெளிச்சம் போட்டு இருட்டையே பகலாக்கினாலும் பலமுகங்கள் இன்னும் கறுத்தே காணப்படுகின்றன. வெளிப்புறத்தோற்றத்துக்கு முகத்தில் பவுடர்பூசி வெள்ளையாக்கினாலும் மனம் கறுத்தே காணப்படுகிறது. சுதந்திரம் என்பது வர்ணங்கள் பூசப்பட்ட பொம்மைகள் போலப் பார்ப்பதற்கு மட்டும் நன்றாக இருக்கிறது. உண்மை சுதந்திரம் என்பது அடிப்படையில் மாற்றம் காண்பதே. சுதந்திர நாட்டில் ஆன்மீகம், அரசியல், சமயம், பொருளாதாரம், சமூகம் இவைகளில் வளர்ச்சி பெற்றிருக்கிறோம். இதை யாரும் மறுக்க முடிளாது. ஆனால் அது இன்னும் முழு நிறைவை அடையவில்லை. இருட்டு மட்டும் இருட்டன்று, பாழடைந்த உள்ளங்களுக்குப் பகலெல்லாம் இன்னும் இருட்டாக இருக்கிறது. இருட்டு ராத்திரியில் மட்டும் வருகிறது என்பதன்று. பகலில் பல உள்ளங்களை இருட்டு இறுகத் தழுவிக்கொள்கிறது. இருப்பினும் நாம் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. இங்கு ஈரம் வற்றிவிடவில்லை, என்பதை இதயத்தின் ஆழத்தில் புதைத்துக் கொள்கிறோம். நாம் பெற்ற சுதந்திரம் மேலோட்டமாகப் பார்த்தால் நன்றாகத் தோன்றும். ஆனால் உள்ளார்ந்த விதத்தில் ஊடுருவிப் பார்க்கவேண்டும். இன்றும் நாம் பெற்ற விடுதலை முழுமை பெறவேண்டுமானால், வறுமையில் இருந்து, ஏழ்மையில் இருந்து, சாதிக்கொடுமையில் இருந்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்து விடுபடவேண்டும். ஒன்றில் விடுதலைபெற்றால் மற்றொன்று நம்மைத் தழுவிக் கொள்கிறது. இறைமகன் இயேசுகிறிஸ்து இறுதி மூச்சுவரை போராடியது போல் விடுதலை என்பது நிறைவு பெற்றுவிட்டது என்று அல்ல. இது ஒரு தொடர்கதை. தொடர்நிகழ்வு, தொடர்போராட்டமாகும், பந்தம், பாசம், நேசம், அன்பு, பகிர்வு போன்ற பண்புகளுக்குள் நம்மை சிறைப்படுத்திக் கொண்டு இவைகள் நிறைவுபெறப் போராட வேண்டும். துன்பச் சிறைகள், வேதனைச்சிறைகள், வேற்றுமைச்சிறைகள், சாதீயச் சிறைகள், மொழி இனச்சிறைகள் இந்த சிறைகளின் விலங்குகளை உடைத்துவிட்டுப் பந்தம் என்ற சிறையின் கைதியாக, ஒற்றுமை என்ற சிறையின் கைதியாகச் சமத்துவம் என்ற சிறையின் கைதியாக மாறுவோம். விடுதலை என்பது எல்லாத் தளைகளிலிருந்தும் விடுதலை அன்று. நாம் விரும்பாத விலங்குகளிலிருந்து விரும்பும் விடுதலைதான்.

அனைத்தையும் பகிர்ந்து கொடுத்து வாழ்ந்த மன்னனைப்போல, அடிமையைக் கடைக்கண் நோக்கிய மரியாளைப் போல், சமத்துவம் காண போராடி இரத்தம் சிந்திய தியாகிகளைப் போல வாழக் கற்றுக்கொள்வோம். கடந்த காலக் கருத்து வேறுபாடுகளைக் களைந்து எதிர்காலச் சிறகுகளுக்குள் சிறைப்பட்டுக் கொள்வோம். புரட்சிக்கவிதைபாடும் புதுமைக்குயில்களாக, சிந்தனையில் நடமாடும் சிங்கார மயில்களாக, கருமையாக இருந்தாலும் ஒருமித்து வாழும் காக்கைகளாக, சமாதானத்தின் சின்னமாகச் சிறகடித்து பறக்கும் சித்திரப் புறாக்களாக வாழ்வோம்.

# மரியா மிகவும் இரக்கமுள்ள தாயே

அன்னை மரியாவைப் பல சிறப்புப் பெயர்களால் அழைத்து மகிழ்கிறோம். "அன்னை மரியா மிகவும் இரக்கமுள்ள தாய்" என்னும் பெயரால் அன்னையைப் போற்றுவது சாலவும் நன்று.

### இரக்கத்தின் மன்றாட்டு

"மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் மிகப் பிரபலமான மரியன்னை மன்றாட்டை அறியாத கத்தோலிக்கர் யாருமே இருக்கமாட்டார். இந்தச் செபம் எத்தனைத் தொன்மையானது என்பதைப் பலரும் அறியமாட்டார்கள். அறிந்தால் வியப்புறுவர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிளேர்வா நகர் புனித பெர்னாந்து என்னும் துறவியால் இயற்றப்பட்டது. இந்தப் புகழ்பெற்ற மன்றாட்டு. 1846ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் இந்த மன்றாட்டை வேண்டுபவர்களுக்குப் பரிபூரண பலன் உண்டு என்று அறிவித்தார். அதன் பின்னர், இந்த வேண்டலின் பயன்பாடு அதிகரித்தது.

### மரியாவின் பரிவு.

அன்னை மரியாவை "மிகவும் இரக்கமுள்ள தாய்" என்று அழைப்பது மிகவும் பொருத்தமானதே. "நான் விண்ணக அரசி மட்டுமல்ல, இரக்கத்தின் தாயும், உனது தாயும்கூட", என்னே ஓர் அருமையான செய்தி. இறைவனின் தாயாய் மாட்சி நிறைந்த அன்னையாய் இருந்தாலும், இரக்கத்தின் அன்னை என அழைக்கப்படுவதையே நம் தாய் விரும்புகிறார்கள்.

ஸ்வீடன் நாட்டு புனித பிரிஜிட்டுக்குக் காட்சி தந்த அன்னை இதே கருத்தை வெளிப்படுத்தினார்கள். "நான் இரக்கத்தின் தாய். நான் நேர்மையாளர்களின் மகிழ்ச்சி மட்டுமல்ல, பாவிகள் இறைவனிடம் அழைத்துவரப்படும் வாயிலும்கூட". மெக்சிகோ நாட்டு குவாட்லுபே திருத்தலத்தில் புனித யுவான் டியாகோவுக்குக் காட்சி தந்தபோதும் அன்னை இந்தக் கருத்தையே மொழிந்தார்கள். "நான் உன் தாய் அல்லவா? என் அரவணைப்பில்தானே நீ இருக்கிறாய்? வேறு உனக்கு என்ன வேண்டும்?"

ஆம், நமது மண்ணகத் தாயின் பரிவையும், இரக்கத்தையும் நம் விண்ணக் தாயிடமும் நாம் பெற்றுக்கொள்கிறோம்.

மாதா பிரார்த்தனையில் அன்னையை "ஞானம் நிறைந்த கன்னிகையே" என்று வாழ்த்துகின்றோம். இயேசு சொன்ன பத்து கன்னியர் உவமையில் நுண்மதியற்ற ஐந்து கன்னியர் தம் விளக்குகளில் எண்ணெய் தீர்ந்து மணமகனைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்தார்கள். ஆனால் முன்மதி கொண்ட ஐவர் விளக்குகளுடன் எண்ணெயும் எடுத்துச் சென்றதால் மணமகனைச் சந்தித்து மகிழ்ந்தார்கள் (மத் 25:1-13)



திருவிவிலியத்திலேயே அன்னை மரியாவின் பரிவுணர்வை நாம் காண்கிறோம். தம் உறவினரான எலிசபெத் கருவுற்றிருக்கிறார் என்று வானதூதர் வழியாக அறிந்ததும், அழைக்கப்படாமலே விரைந்து சென்று அவரோடு தங்கியிருந்து அவருக்குப் பணிவிடை செய்தார். பரிவு மிக்க அன்னை மரியா. கானாவூர் திருமண விழாவிலும் திராட்சை இரசம் தீர்ந்ததும், அழைக்கப்படாமலே முன் வந்து இயேசுவிடம் பரிந்துபேசி, தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றிய முதல் புதுமையை நிகழ்த்த வைத்தார் அன்னை மரியா.

இந்த இரு நிகழ்வுகளும் மரியா எத்தனை பரிவும், இரக்கமும் கொண்டவர் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள். திருச்சபையின் வரலாற்றில், புனிதர்களின் வாழ்வில், மறைப்பணியாளர்களின் பணியில் அன்னை மரியா இரக்கச் செயல்கள் பல ஆற்றியுள்ளார் என்பதற்கு ஏராளமான சான்றுகளை வரலாற்றில் வாசிக்கிறோம்.

### இரக்கத்தின் தாயே

இரக்கத்தின் புனிதை என அழைக்கப்படும் புனித பவுஸ்தினா தாம் கண்ட ஒரு காட்சியில் அன்னை மரியா இப்படிச் சொன்னதாகக் குறிப்பிட்டுள்ளார். முன்மதி கொண்ட இந்தக் கன்னியர் அன்னை மரியாவுக்கு முன் அடையாளமாக இருக்கிறார்கள். நம் தாய் ஞானம் நிறைந்த கன்னிகை மட்டுமல்ல, இரக்கம் நிறைந்த கன்னிகையும்கூட. எனவே, பாவிகளும், அறிவிலிகளுமான நம்மீது பரிவுகொண்டு அவரது இரக்கம் என்னும் எண்ணெயை நம்மோடு பகிர்ந்து, அவரது திருமகனின் திருமண விருந்தில் நாமும் பங்குபெற அருள்கின்றார்.

### இரக்கத்தின் அருஞ்செயல்கள்

இரக்கத்தின் அன்னை புரிந்த பல அருஞ்செயல்களை வரலாற்றின் ஏடுகளில் நாம் வாசிக்கின்றோம். இதோ அவற்றுள் ஒன்று. கி.பி 590ஆம் ஆண்டில் உரோமை நகரம் பெரும் கொள்ளை நோய் ஒன்றால் பாதிக்கப்பட்டு, ஏராளமானவர்கள் உயிரிழந்து கொண்டிருந்தார்கள். எந்த மருந்தும் குணப்படுத்த முடியாத அந்த நோயால் திருத்தந்தை பெரிய கிரகோரியாரும் பாதிக்கப்பட்டிருந்தார். எனவே, அன்னை மரியாவின் உதவியை நாடவேண்டும் என முடிவு செய்து, அன்னையின் திருவுருவப் படத்தைப் பவனியாக உரோமை நகரின் தெருக்களில் கொண்டு வர உத்தரவிட்டார். புனித லூக்காவால் வரையப்பட்ட ஓவியம் எனக் கருதப்பட்ட சகாயத் தாயின் படத்தைக் குருக்களும், மக்களும் சுமந்து, பவனியாக வந்தனர். உரோமையின் மேரி மேஜர் பசிலிக்காவில் அந்தப் பவனி நிறைவுற்றது. அந்தப் பவனியின்போதே எண்பதுபேர் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது. இருப்பினும், பவனியின் இறுதியில் ஒரு விண்ணகக் காட்சியை அனைவரும் கண்டனர். அதிரியான் கோட்டைக்கு மேலாக ஒரு வானதூதர் கையில் இரத்தம் தோய்ந்த மிகப்பெரிய வாளுடன் நின்று கொண்டிருந்தார். அந்தக் கணத்திலிருந்து கொள்ளை நோய் அந்நகரைவிட்டு அகன்றது. (இன்று வரையில் அதிரியான் கோட்டை "வானதூதரின் கோட்டை - Castle of St. Angelo என்று அழைக்கப்படுகிறது)

அப்போதிலிருந்து "விண்ணக அரசியே வாழ்க. வாழ்க" என்னும் பாடலை இசைக்க திருத்தந்தை கிரகோரியார் ஆணையிட்டார். அவரது பெயரால் அமைந்துள்ள கிரகோரியன் இசையில் இன்றும் நாம் அந்தப் பாடலைப் பாடி வருகின்றோம். ஆம் நம் தாய் மிகவும் இரக்கமுள்ள அன்னை என்பதற்கு இதுபோல ஏராளமான சான்றுகள் உள்ளன. எப்போதெல்லாம் நமக்கு இரக்கம் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் இந்த இரக்கத்தின் தாயை நாடுவோம். பரிவும், நலமும் பெற்றுக்கொள்வோம்.


✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

# தூய யோசேப் வாஸ் அடிகள் பேசினால்....



இயேசுவுக்காய்
ஏற்ற திருவுடையை
அவருக்காய் களைந்தேன்
ஒரு கூலியாள் வேடம்
புனைந்தேன்
இரத்தம் கசிந்த
கால்களுடன்
இம்மண்ணில் இயேசுவின்
திருமறை அவர்
உயிர் கொடுத்து
நேசித்த திருச்சபை
கலாபனைக்குள்
காயப்பட்டு மறைந்து
இறந்து விடாது காக்க
பசி, தாகம், களைப்பு,
தூக்கம், சலுகை
எது பற்றியும் நினையாது
இயேசுவுக்காய்
உயிர்கொடுக்க
துணிந்தேன்
இனிவரும் காலம்
திருமுழுக்கு பெற்ற
உங்கள் அனைவர்
கைகளிலும்
பொறுப்பேற்ற பணிகளால்
மறைகாக்க உழைக்க
உங்களோடு உரையாட
உறவாட என் திருநாளில்
விழைகிறேன்.
நற்செய்தி
வேகமாக அறிவிக்க
விலையுமர்ந்த கால்கள்
வேண்டுமா? ஆர்வமும்
விவேகமும் கொண்ட
இரண்டு எளிய காலடிகள்
போதுமே...
ஆன்மாக்களை
மீட்டெடுக்க கையடக்க
தொலைபேசி வேண்டுமா?
தொலைந்து போனதை
தேடி மீட்கும் இயேசுவின்
ஆன்ம தாகம் போதுமே
மறையை
பரப்ப அழைப்பிதழ் தர
வேண்டுமா? தேவையுள்ள
இடம்தேடி இயேசுவின்
அன்பைச் சொல்லும்
பரந்த மனம் போதுமே
இயேசுவின்
பார்வைகள் இன மத நிற
பேதம் பார்க்குமா
எல்லோரும் இறைசாயல்
என்ற உண்மைக்காய்
உயர் பணி புரியுமே
யாருமில்லா
இடத்தில் எப்படி பணி
செய்வது என பயம்
தேவையா ஒரு துளி
நம்பிக்கை கலாபனை
தாண்டி நம்மை
தூக்கிச் செல்லும் என்ற
துணிவு போதுமே
உதவிக்கு
கரங்கள் இல்லை என்ற
பரிதவிப்பு வேண்டுமா
செபத்தை
வாழ்வாக்கினால்
சிறப்பாய் பணி செய்ய
விண்ணகமே உதவிடும்
என்ற தெளிவுபோதுமே
புதுமைகள் புரிய பல
பட்டங்கள் தேவையா
இறைமகிமைக்காய்
உழைப்போம் என்ற
மனவுறுதி போதுமே
உணவு
பாதுகாப்பு பணம் யார்
தருவார் பணிக்கு என்ற
ஏக்கமா? இறைபராமரிப்பு
இவையனைத்தையும்
நிறைவாக்கும் என்ற
எளிய நம்பிக்கை
போதுமே
இதுமட்டுமே என் பணி
இதற்குமேல் முடியாது
என்ற முணுமுணுப்பு
தேவையா? இறைவன்
என்னவெல்லாம் செய்ய
கேட்கிறார் என உணரும்
அர்ப்பணமிக்க இதயம்
போதுமே
போதித்ததோடு
முடிந்தது என் கடன்
என்ற எல்லைகள்
வேண்டுமா?
வாழ்க்கையே
அன்பு கொண்ட
இறைவனை தாங்கிச்
செல்லும் பலியானால்
மௌனப்புன்னகையும்
மகத்தான போதனையே
நிறுவனங்களுக்குள்
முடக்கப்பட்டு
அடக்கப்பட்ட பணிகளால்
இன்று வைத்தீரோ
இயேசுவை சிறையிலே
நிறுவனங்களைத்
தாண்டி மனித
இதயங்களை நோக்கிச்
செலவீர். ஏனென்றால்
இயேசு இன்று
இருப்பது சேரியில்
புயலுக்குள்ளும் புரட்சி
செய்ய வரட்சிக்குள்ளும்
வான்மழை பெய்விக்க
முடியுமா என தவிப்பா
இயேசுவின் இனிய
அன்பிலிருந்து ஏதுதான்
என்னை பிரிக்க முடியும்
என்ற அவரோடு
கொள்ளும் உயிரான
உறவு போதுமே ஆயிரம்
புதுமை செய்ய
அன்று
கலாபனைக்குள்ளும்
கடுகளவும் சிதறாமல் -
என் பணித் தொடர்ந்தேன்
திருச்சபையை
அழியாமல் காக்கவே
இன்றோ பங்குச்சபை
பக்திச்சபையின்
பணிகளுக்குள் ஒருவர்
மற்றவரை தாக்கும்
ஆயிரம் கலாபனைகள்
ஏன் திருச்சபையை
உருக்குலைத்து தாக்கவா
தன்னந்தனியே
நட்டநடுநிசியில் கொடூர
கானகத்தில் யாரும்
அறியாமல் பணி செய்து
மாற்றினேன்
முடிந்து போகவிருந்த
இலங்கை திருச்சபையின்
வழியை இன்று
சீ.சீ.ரீவியிலும்
முகப்புத்தகத்திலும் நம்
பணிகள் விளம்பரம்
செய்யப்பட வேண்டும்
என்ற வியாபார
நோக்கத்தால்
செய்கிறீர்களே
திருச்சபையை கவிழ்க்கும்
சதியே
இயேசுவுக்காய்
உயிர் கொடுத்து
அவர் உயிர் கொடுத்து
மீட்ட திருச்சபையை
தழைக்கச் செய்ய
என்னைப் போல
உருமாறி மறைசாட்சியாய்
இறைமாட்சி காண
உழைக்க
அழைக்கின்றேன்
திருமுழுக்கு பெற்ற
உங்கள்
அனைவரையும்.

**ஆக்கம். செல்வி. பற்றீசியா.**



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 4வது ஞாயிறு**
**ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் (02.02.2020)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** திருஅவையின் மக்களாகிய நாம் இன்று ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்த திருவிழாவை கொண்டாடுகின்றோம். இஸ்ராயேல் நம்பிக்கையின் அடையாளமாக இருந்த சிமியோன் இயேசுவை கையில் ஏந்தி கூறிய வார்த்தைகள் அன்னை மரியாளின் உள்ளத்தில் எந்தவித குழப்பத்தையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் மரியாள் தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்திருந்தார். உனது உள்ளத்தை ஒரு வாள் ஊடுரூவும் என்ற செய்தி கடினமாக இருந்தபோதும் மரியன்னையை அச்சமுற செய்யவில்லை. சிமியோன் பாடும் சிறு பாடல் திருஅவையின் இரவு செபத்தின் தினப்பாடலாக விளங்குகிறது. இந்நிகழ்வின் ஊடாக இயேசு தான் பழைய ஏற்பாட்டின் நிறைவு என்று புலப்படுத்துகின்றார். நாமும் திருமுழுக்கின் வழியாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள். எமது வாழ்வு அர்ப்பண வாழ்வாக இருக்கின்றதா என்று சிந்திக்க இன்றைய திருவிழா நம்மையும் அழைக்கின்றது. திருமுழுக்கின் விசுவாச வாழ்வை வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : மலாக் 3:1-4**
நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார்.

**பதிலுரைப் பாடல் :**
படைகளின் ஆண்டவர் இவர். இவரே மாட்சிமிகு மன்னர்.

**இரண்டாம் வாசகம் : எபி 2:14-18**
எல்லாவற்றிலும் தம் சகோதரர் சகோதரிகளைப் போல் ஆனார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 2:22-40 அல்லது 2:22-32**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பின் நிறைவே எம் இறைவா! உம் திருமகன் இயேசுவுக்காகத் தம்மை அர்ப்பணம் செய்த திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தமது அர்ப்பண வாழ்வில் உறுதியாய் நிலைத்து நின்று இயேசுவின் சாட்சிகளாக என்றும் வாழவும், நிலைவாழ்வை நோக்கி திருஅவையின் இறைமக்களை வழிநடத்தவும் உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று...

குழந்தை இயேசுவை காணிக்கையாக அர்ப்பணித்த திருநாளை கொண்டாடும் நாம், உலகத்தில் மனிதத்தை மீண்டும் மலரச் செய்த குழந்தை இயேசுவைப் போல் எமது மண்ணிலும் உலகிலும் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகள், சுயநல எண்ணங்கள், அழிவுக்குரிய சிந்தைகள் யாவும் அகன்று எல்லா மனிதரிடையேயும் மனிதநேயம் மலர அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திட வரமருள வேண்டுமென்று...

திருமுழுக்கின் வழியாக இறைவனின் பிள்ளைகளாக அர்ப்பணிக்கப்பட்ட நாமும் எமது பொதுக்குருத்துவத்தின் அழைப்பை உணர்ந்தவர்களாக வாழவும், பெற்றோர்கள், பெரியவர்கள், முதியவர்கள் ஆகிய அனைவரையும் மதித்து அன்பு செய்து கீழ்ப்படிந்து நடக்கவும், உலகப் போக்கிலும் நுகர்வுக் கலாச்சாரத்திலும் மூழ்கிவிடாமல் இயேசுவின் சாட்சிகளாகவும் அவரின் சீடர்களாகவும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு**
**(09.02.2020)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு திருவழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களாகிய நமக்கு இன்றைய நற்செய்தியானது இருபெரும் செய்தியை தருகின்றது. உலகின் ஒளியாக வந்த இயேசு தம் சீடர்களுக்கு உலகின் ஒளியாகவும், சாரமுள்ள உப்பாகவும் விளங்க அழைப்புவிடுக்கின்றது. நாம் வாழும் இன்றைய சமுதாயத்தில் லஞ்சம், ஊழல், சாதி, மத பிரிவினைகள், சுயநலப்போக்குகள், நிறைந்து காணப்படுகின்றது. இவற்றின் மத்தியில் நாம் ஒளியாக, உப்பாக சாட்சிய வாழ்வு வாழ வேண்டும். நமது குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் இயேசுவின் பண்புகளையும், போதனைகளையும், விழுமியங்களையும் ஏற்று இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ இறையருள் வேண்டி பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : எசா 58:7-10**
உன் ஒளி விடியல் போல் எழும்

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவருக்கு அஞ்சுவோர் இருளில் ஒளியென மிளிர்வர்.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 2:1-5**
கடவுளைப் பற்றிய மறைப்பொருளை உங்களுக்கு அறிவித்தேன்

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! "உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 5:13-16**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நீங்கள் உலகிற்கு ஒளியாயிருங்கள். சாரமுள்ள உப்பாயிருங்கள் என்ற இயேசுவின் அழைப்பை ஏற்று திருஅவையின் ஒளியாகவும் உப்பாகவும் விளங்கும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் ஒளியாகவும், உப்பாகவும் திகழ்ந்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களை வழிநடத்தத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாம் வாழும் நாட்டிலும், சமுதாயத்திலும் தலைதூக்கி நிற்கும் லஞ்சம், ஊழல், சாதி, சமயம், இனமொழி பேதங்களும், பிரிவினை சுயநலப் போக்குகளும், அகல்வதற்கு கிறிஸ்துவை ஏற்று வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதிகம் பாடுபட்டு உழைக்கவும், ஒளியின் மக்களாக சாட்சியம் பகரவும், சுவைதரும் உப்பாக செயல்படவும் வரமருள வேண்டுமென்று...

இயேசு உலகின் ஒளி என்றால் அவர் மக்கள் நாமும் உலகின் ஒளிதான் எனவே நம்முன் இருக்கும் ஒளி ஒளிர வேண்டும். இதை உணர்ந்தவர்களாக எமது சொல்லாலும் செயலாலும், வாழ்வாலும் மற்றவர்களையும் ஒளிர்விக்கவும் சாரமுள்ள உப்பாக செயல்பட்டு புளிக்காரமாக விளங்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# ஓ... அம்மா நீ இல்லாமலா?

அம்மாவின் கருவறை
குழந்தையின் வாழ்வில் முதல்
பாதுகாப்பு. ஓ தாய் மரியே
திருச்சபையின் வாழ்வை கருவில்
கருத்தாய் தாங்கிய பேறு
கிடைக்கும் யாருக்கு - பத்துமாதம்
அம்மாவுடன் தொப்புள்
கொடி உறவு - விண்ணகம்
வரை எம்மை கொண்டு செல்லும்
உயிரை விட்டு நீங்காத உறவு
அம்மா உலகை காண முன்
கருவை அழித்தால் கருக்கலைப்பு
ஓ தூய தாயே அன்று நீர்
இல்லையென்றால் திருச்சபைக்கும்
கருச்சிதைவே.

வீட்டில் அம்மா இல்லை
என்றால் வறுமை, வெறுமை தேவ
தாயே திருச்சபைக்கு நீர் தாயாக
இல்லையென்றால் அது வெறும்
சபை அம்மா.
விழுந்தாலும் வலித்தாலும்
அழைப்பது அம்மாவை தான்
திருச்சபைக்கு அடி என்றால்
வலிப்பது உமக்கன்றோ

அம்மாவை காணாமல்
குழந்தைகள் அழுவதுண்டோ
அன்னையே துயருறும் வேளையில்
காட்சி தந்து இறைவன்
கைவிடவில்லை என்ற செய்தி
சொல்லும் உமை தொழுகிறேன்

அம்மா இயேசுவை பற்றி
கற்பிக்கும் முதல் ஆசான்
தூய கன்னிகையே நீர்
இயேசுவையே வழங்கி நிற்கும்
பேராசான்
அம்மா இல்லாத குழந்தை
அனாதை என்பாரே
என் தூய தாயே நீர்
இல்லாவிட்டால் எமக்கு கதி
ஏதம்மா
அம்மாவை திட்டுவோரை கொலை
செய்யத்தான் தோன்றும்
இயேசுவின் தாயே உம்மை
குறைசொல்வோர்க்காயும்
பரிந்துரை தந்து காக்கின்றீர்
என்றுமே

அம்மாவின் மார்பில்,
மடியில் தவழ்வது சுகமன்றோ
தூய அரசியே என் ஆன்மா
இளைப்பாறும் உம் இதயம்
என்றும் இதமன்றோ

காணாவிட்டால் கதறி
பரிதவிப்பாள் அன்பு அம்மா
நாமும் உம் மகனை விட்டு
தொலைவில் சென்றால் உயிரை
விடுவீரே என் விண்ணக அம்மா

பிறர் குறைகூற
சகிக்கமாட்டாள் என் அம்மா
பாவக்கறை அணுகாதிருக்க உம்
மகனையே! கல்வாரியில் பலி
தந்தீரே என் உயிர் நீயே
உலகத்தில் அம்மாவுக்கு ஈடு
இணை ஏதுமுண்டோ?
உன் தயவில் வாழும்போது
எனக்கு ஏதும்
உடல் உள ஆன்ம
குறையுமுண்டோ?

அம்மாவுக்கு அடித்தால்
எங்களுக்கும் வலிக்கும்
தேவ தாயே உம்மை பலரும்
தூற்றுகையில் எம் கண்களிலும்
நீர் வழிகிறது.
அம்மாவின் தியாகத்தினால்
வாழ்க்கை இனிக்கிறது.
தேவ மாதா உம் பரிந்துரையால்
அருள் மழை பொழிகிறது.

அம்மா என்னை விட்டு
விட்டு போகாதே, என் மனம்
துடிக்கிறது.
தேவ அன்னையே மரணம்
வரை என்னை மறக்காத உன்
துணையால் இதயம் இனிக்கிறது.

**ஆக்கம். செல்வி. பற்றீசியா.**





# சுபோதி

# ஒருங்கிணைந்த கல்வி நெறி நிலையம்




**வேவல, பிலியந்தல, ஸ்ரீ லங்கா.**

**தொலைபேசி : 011-2614317, 011-2614430**


"சுபோதி" கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் ஒருங்கிணைந்த கல்வி நெறியானது, முழுமையான மனித வாழ்க்கை வளர்ச்சிக்கு அடிகோலுகின்றது. இந்நிலையத்தின் பயிற்றுனர்கள் மனித வாழ்வின் பூரண வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு பயன்பெறுபவர்கள் தமது வாழ்க்கையின் சரீர ரீதியான, சமூக ரீதியான, உள ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான அம்சங்களில் தேர்ச்சி பெற்று பூரண நிலை அடைய உதவுகின்றார்கள். புறத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அறிவும், அகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஞானமும் ஒரு மனிதனுக்கு ஒன்று சேர்ந்து கிடைக்க இந்நிலையம் அத்திவாரம் அமைத்துக் கொடுக்கின்றது.

சுய விழிப்புணர்வு (Self-awareness) மற்றும் வாழ்க்கை நெறிக் கல்வி (Life education) என்பன "சுபோதி" வழங்கும் ஒருங்கிணைந்த கற்கை நெறியின் முக்கிய அம்சங்களாகும். இந்த வருடம் மனித வாழ்வின் எல்லாப் பருவங்களுக்கும் கிடைக்கும் வகையில் எமது பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## சிறுவர்களுக்காக வாழ்க்கை விழுமியப் பயிற்சி நெறி
### (Value Education Program)

**10 வயதுக்கு மேற்பட்ட, அல்லது 5ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட பிள்ளைகள், மாணவர்களுக்கானது.**

பிள்ளைப் பருவம் (Childhood) என்பது சிறுவர்கள் தாயின் அரவணைப்பிலிருந்து தமக்கென்று தனித்தன்மையை நோக்கி வளர்கின்ற பருவமாகும். இந்தப் பருவத்தில் வளமான வாழ்க்கைப் பாதையில் பயணிப்பதற்கு ஏதுவாக எது நல்லது எது தீயது என்ற அறிவும் அதே நேரத்தில் நற்பண்புகளைத் தமக்குள் உறுதிசெய்து கொள்ளத் தேவையான உட்சக்தியும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம்.



"சுபோதி" இவர்களுக்கான வாழ்க்கை விழுமிய நெறிமுறைக் கல்வியை வழங்கக் காத்திருக்கின்றது.

## கட்டிளம் பருவத்தினருக்கான ஆளுமை அபிவிருத்தி, தலைமைத்துவப் பயிற்சி நெறி.
### (Personality Development and Leadership Program)

**15 வயதிற்கு மேற்பட்ட, அல்லது 10ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட கட்டிளம் பருவத்தினர். மாணவர்களுக்கானது.**

சுதந்திர வாழ்வைத் தேடிடும் அதேவேளையில் அறிவு பூர்வமான, உணர்வு பூர்வமான வளர்ச்சிக்குத் தேவையான தகவல்களைத் தேடும் வயது கட்டிளம் பருவத்தினருக்குரியது. புறத்திலிருந்து அவர்கள் அறிவைத் திரட்டிக் கொள்வதைப் போல், அகத்திலும் அவர்கள் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு பக்குவமான பாதையில் பயணிக்க அவர்களுக்குத் தகுந்த ஆளுமை வளர்ச்சி தேவை.

இவர்களுக்காக "சுபோதி" ஆளுமை அபிவிருத்திக் கல்வியை வழங்குகின்றது.

இன்றைய கட்டிளம் பருவத்தினர் எதிர்காலத்தின் தலைவர்களாய்த் தலையெடுப்பார்கள். அவர்களின் ஆளுமைக்குத் தகுந்த தலைமைத்துவப் பண்புகளை அடையாளம் கண்டுகொள்ளவும் அப்பண்புகளைத் தமக்குள் வளர்த்துக் கொள்ளவும் தகுந்த பயிற்சி தேவை.



இவர்களுக்காக "சுபோதி" தலைமைத்துவப் பயிற்சி வழங்குகின்றது.

## இளைஞர் - யுவதிகளுக்கான வாழ்க்கை நோக்கு, அன்புறவு மற்றும் திருமண ஆயத்தப் பயிற்சி நெறி.
### (Life Orientation, Love Relationship and Marriage Preparetion Program)

**17 வயதுக்கு மேற்பட்ட, அல்லது 12ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட இளைஞர் - யுவதிகள் மாணவர்களுக்கானது.**

இளைஞர்கள் - யுவதிகள் நமதுலகின் எதிர்காலம். வாழ்வின் அர்த்தம், நோக்கம் மற்றும் மனித சமூக உறவுகளில் தமது பங்கு என்பவை பற்றி இவர்கள் கருத்தாய் இருப்பார்கள். தமக்கென்று குடும்பம் அமைத்து, மனித சமூகம் எனும் மாபெரும் குடும்பத்தில் அங்கம் வகிக்கும் பருவத்தில் இவர்கள் இருக்கின்றார்கள்.

இத்தகையோருக்கு "சுபோதி" வழங்கும் கல்வி நெறிதான் வாழ்க்கை நோக்கு, அன்புறவு மற்றும் திருமண ஆயத்தப் பயிற்சி நெறி.

## திருமண, குடும்ப நலக் கல்வி நெறி
### (Marriage and Family Enrichment Program)

**தம்பதியர்கள், குடும்பத்தினர்களுக்கானது**

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றதோ இல்லையோ, நாம் வாழும் திருமண வாழ்வானது அதனதன் தரத்தைப் பொறுத்து நம் வாழ்வில் சொர்க்கத்தையோ அல்லது நரகத்தையோ நிச்சயிக்கின்றது என்பது உறுதி.

"சுபோதி" தம்பதியர்களுக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கும் பாட நெறிகள் வளமான திருமண வாழ்க்கைக்கான "விபரக் கொத்தாக" அமைவதுடன், திருமண வாழ்க்கையின் பருவங்கள், பெறுமதிகள், சவால்கள் மற்றும் திருமண தாம்பத்திய வகைகள் போன்ற விபரங்களையும், இறுதிவரை திருமண உறவில் தம்பதிகள் நிலைத்திருந்து வளமான குடும்பத்தை அமைக்கத் தேவையான சக்தியையும் வழங்குகின்றது.

## பெற்றோர்கள் பாடநெறி
### (Parenting Program)

**பிள்ளைகளின் பிரதான அன்பு வழங்கிகளான பெற்றோருக்கானது.**

குழந்தைகள், சிறுவர்கள், கட்டிளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரளவில் மாத்திரம் பெற்றோர்களாய் இராமல், பிள்ளைகளின் ஒவ்வொரு வாழ்க்கைப் பருவத்திற்குமான அன்புத் தேவைகளில் அக்கறை கொண்டு தமது பிள்ளைகளை அன்பில் நிறைவு காணச் செய்து மனித சமூகத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்குத் தயார் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

"சுபோதி" இவர்களுக்காகப் பெற்றோர்கள் பாடநெறியை வழங்குகின்றது.

## ஆசிரியருக்கான பாடநெறி
### (Student Guardian Program for Teacher)

**பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மறை ஆசிரியர்களுக்கானது.**

பிள்ளைகள் கல்வியின் நிமித்தம் தம்மை நாடி வருகின்றபோது ஆசிரியர்கள் இந்தப் பிள்ளைகளுக்கான பாதுகாவலர்களாகவும் இருந்து, இவர்களின் அறிவு ரீதியான வழிகாட்டிகளாகவும், உணர்வு ரீதியான கரிசனை வழங்கிகளாகவும் தம்மை அர்ப்பணிக்கின்றார்கள்.

"சுபோதி" இத்தகைய ஆசிரியர்களுக்கு பாதுகாவலர் பணிக்கான பயிற்சியை வழங்குகின்றது.



## உளவியல் குணப்படுத்துனர் பயிற்சிப் பாசறைகள் (Counsclor Training Program)

**உளவியல் குணப்படுத்துதல் பயிற்சி பெற விரும்பும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கானது.**

வாழ்க்கையின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கும் சிலர், அவை ஏற்படுத்தும் உள ரீதியான தாக்கங்களைச் சமாளிக்க முடியாமல் எதிர்மறை உணர்வுகளினாலும், எண்ணங்களினாலும் ஆட்கொள்ளப்படுகின்றார்கள். இவர்கள் மீண்டும் சீர் நிலையை அடைவதற்கு தேர்ச்சி பெற்ற உளவியல் குணப்படுத்துனர்களின் உதவி தேவை.

"சுபோதி" இத்தகையோர்களுக்காக உளவியல் குணப்படுத்தல் பயிற்சிப் பாசறைகளை ஆயத்தம் செய்கின்றது....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# மசபியேல் அரசி வழங்கிய செய்தி

# கடவுளின் அன்பும் இரக்கமும்.



லூர்து பதியில் மாதாவைக் காணவும் அவருடன் பேசவும் பேறுபெற்ற சிறுமி பெர்னதெத் சோபிரஸ் தை 7, 1844இல் ஏழைக் குடும்பத்தில் (ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள், ஏனெனில் கடவுள் அரசு உங்களதே லூக் 6:20) பிறந்தவர்.

மாசி 11, 1855இல் பதினொரு வயது சிறுமியான அவள் தன் சகோதரி டோய்னத் மற்றும் தோழி ஜெனியுடன் நண்பகல் நேரத்தில் காட்டுக்கு விறகு பொறுக்கச் சென்றாள். ஏனென்றால் குளிரில் இருந்து காத்துக் கொள்ள உதவும் கணப்பு அடுப்புக்கு மிகவும் அதிகமான விறகு தேவைப்பட்டது. அந்த ஏழைக் குடும்பத்தால் போதுமான அளவு விறகோ கரியோ வாங்க வசதி இல்லை.

அவர்கள் மூவரும் புல்வெளியைத் தாண்டி காவ் ஆற்றுடன் சேரும் நீரோடையை அடைந்து மசபியேல் குகையின் முன் வந்தனர். டோய்னத்தும் ஜெனியும் ஓடையை "ஆ ஊ" என்று கத்தியபடி கடந்தனர். ஏனென்றால் பனியைப் போல் அந்த நீர் மிகவும் குளிராய் இருந்தது. அதைப் பார்த்ததும் பெர்னதெத் சற்று நேரம் தாமதித்தாள், ஏனென்றால் அவளுக்கு ஆஸ்துமா நோய், அந்தக் குளிர் நீர் காலில் பட்டால் போதும் மூச்சு இரைப்பும் இளைப்பும் தொடங்கிவிடும்.

## முதல் காட்சி

திடீரென காற்று இரைந்து வீசுவதுபோல் தோன்றிற்று. ஆனால் மரங்கள் அசையவில்லை. பெர்னதெத் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். குகையில் ஒரு பெண்! அவர் சிறுமியைப் பார்த்து புன்னகைத்தார்! அவள் பெண்ணுடன் சேர்ந்து ஜெபமாலை ஜெபித்தாள். அன்னையின் முதல் காட்சியின் போது இதுதான் நடந்தது.

நம்மை விடவும் செல்வத்தால் செல்வாக்கால் பதவியால் அழகால் ஆரோக்கியத்தால் தாழ்ந்தவர்களைப் பார்த்து நம்மால் அன்பாக ஆதரவாக புன்னகைக்க முடியுமா? முடியாதல்லவா? ஆனால் அன்னை, ஏழையும் நோயாளியுமான பெர்னதெத்தைப் பார்த்து பரிவுடன் புன்னகை செய்தார்.

அந்த சமயத்தில் மசபியேல் குகை அழுக்கும் குப்பைக் கூழமும் குவிந்த இடமாகத்தான் இருந்தது. வழக்கமாக அந்தக் குகையில் கால்நடைகளே தங்கி இளைப்பாறும். அதை அன்னை தேர்ந்து கொண்டது ஏன்? (மாட்டுச் சாணமும் வைக்கோல் குப்பையும் கிடந்த தொழுவம் தானே அவர் மகனின் பிறப்பிடம், அதனால் தானோ?)

குகையில் காணப்பட்ட பெண் வெண்ணாடை அணிந்து மிகவும் தூய்மையாய் இருந்தார். அது கடவுளின் தூய்மையாய் இருந்தது. அந்த தூய்மைமிகு மரியாவின் அமல உற்பவத்துக்கும் குகையின் அசுத்தத்துக்கும் பெரிய முரண்பாடு. கடவுளின் இரக்கப் பெருக்கம் என்ற செல்வத்துக்கும் மனிதனின் ஏழ்மைக்கும் எத்துணை வேறுபாடு அத்துணை வேறுபாடு அங்கும் இருந்தது.

இயேசு பாவிகளின் இல்லங்களுக்குச் சென்றார். அவர்களோடு உணவு உண்டார். (லூக் 7:36-38, 19:7-8), "ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கையே பெரியது" என்றுரைத்தார். (மாற் 12:41-44) அவர் காணாமல் போனவற்றைத் தேடியே வந்தார். பாவம் செய்யாத 99 நீதிமான்களை விடவும் ஒரு பாவியையே அவரும் நாடித் தேடினார். பாவப்பட்ட, நோயுற்ற, ஏதும் இயலாத பெர்னதெத்தையே அன்னையும் தேர்ந்து கொண்டார்.

## மசபியேலில் தோன்றிய மறையின் அரசி

மசபியேல் என்ற சொல்லுக்கு கடினமான பாறை என்றும் ஒரு பொருள் இருப்பதாகச் சொல்கின்றனர். சீனாய் மலை, தாபோர் மலை, கல்வாரி மலை, சிறிய குன்றில் அமைந்த மசபியேல் குகை இவைகள் யாவே இறைவனும் இயேசு ஆண்டவரும் அவர் தாய் மரியாவும் தேர்ந்து கொண்ட மலைகள், மாதா மசபியேல் குகையில் சொல்லிய செய்தி வேதாகமம் சொல்லும் செய்தியில் இருந்து வேறுபட்டதல்ல. இறைவன் நமது பாவங்கள், பலவீனங்கள் தோல்விகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு நம்மேல் அன்பு கூர்ந்தார் என்பதே அந்தச் செய்தி.

மாசி 18 : மூன்றாவதாக, பெரிய வியாழனன்று தந்த காட்சியின்போது மாதா முதன் முதலாவதாக பெர்னதெத்திடம் பேசினார். "அம்மா, நீங்கள் யார் என்று இந்த தாளில் எழுதுங்கள்" என்று அவள் ஒரு தாளையும் பென்சிலையும் மாதாவிடம் நீட்டினாள். "அது தேவையில்லை" என்று மாதா கூறினார். "நான் உனக்கு சொல்வதெல்லாம் எழுதத் தேவையில்லை. பேச்சு இதயத்தின் ஆழத்தில் இருந்து வருகிறது, நீயும் நானும் இதயப்பூர்வமாகப் பேசுவோம்" என்று மாதா அறிவுறுத்தினார்.

## பதினைந்து மறைபுண்மைகளின் ஜெபமாலை

"நீ எனக்காக ஒன்று செய்வாயா? இன்று முதல் பதினைந்து நாட்கள் இங்கு வருவாயா?" மாதா சிறுமியிடம் கேட்டார். இதுவரை எவரும் இப்படி அன்புடன் பேசியதில்லை என்பதை அப்போது அவள் உணர்ந்து மகிழ்ந்தாள். மாதாவின் அன்பு அழைப்பை சிறுமி ஏற்றுக்கொண்டார். 15 முறை என்பது பதினைந்து மறையுண்மைகளான மகிழ்ச்சி, துக்கம், மகிமை என்ற குறிப்பால் ஜெபமாலையையும் குறிக்கலாம். குழந்தைகளும் அன்னையுடன் ஜெபமாலை செபித்தனர்.

மாதாவின் அழைப்பு குறித்து பின்னர் பேசும்போது பெர்னதெத் இவ்வாறு குறிப்பிட்டார். "ஒருவர் மற்றொருவரை நேரில் பார்த்துப் பேசுவதுபோல் மாதா பேசினார். மனிதர்கள் கடவுளின் சாயலாக படைக்கப்பட்டதால் அனைவரும் சமம் அல்லவா? நானும் நேசிக்கப்படுகிறேன். மதிக்கப்படுகின்றேன் என்பதை அப்போதுதான் நான் உணர்ந்தேன்", "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், தடுக்கவேண்டாம், கடவுளரசு இத்தகையோரதே" (மாற் 10:14) என்று இறைஇயேசு சொல்லியதை நாம் நினைவு கூர்கிறோம்.

மூன்றாவதாக மாதா உரைத்தவை "இந்த உலகில் உனக்கு மகிழ்ச்சியை நான் வாக்களிக்கவில்லை. ஆனால் மறு உலகில் என்றார். இந்த உலகம் வன்முறை, பொய், பாலியல் வன்கொடுமை, இலாப நோக்கம், போர் ஆகியவற்றில் நிலைக்கலாம். ஆனால் அன்பு, பரிவு, மனிதநேயம், நீதி, நம்பிக்கை நிறைந்த உலகம் ஒன்றும் இங்கே இருக்கிறது. அது கடவுளின் அரசு (லூக் 17:21) அதை நீ உலகில் கண்டு கொள்ள வேண்டும் என்று மாதா குறிப்பிட்டார்.

இறை அனுபவம் என்பது அன்பை உணர்வதே. இதை யார் எல்லாம் கண்டுபிடிக்கின்றனரோ அவர்களுக்கு கடவுள் உறுதி அளிக்கின்றார். "கடவுள் அரசு உங்களுக்கு வெகு தொலைவில் இல்லை" என்று. இந்த உறுதியைத்தான் மரியன்னை பெர்னதெத்துக்கும் வழங்கினார்.

## சேற்றைப் பூசி, கசப்பான இலையை உண்டாள்.

முதல் ஏழு காட்சிகளில் பெர்னதெத்தின் முகம் ஒளியாலும், மகிழ்ச்சியாலும் மலர்ந்திருந்தது. ஆனால் பின்னர் நடந்த காட்சிகளில் அவள் முகம் சோகத்தாலும் துக்கத்தாலும் புரிந்து கொள்ள முடியாத கவலையாலும் இறுகிப் போயிருந்தது.

முழந்தாட்படியிட்டு நகர்ந்து அவள் கெபியின் பின்புறம் சென்றாள். நூற்றுக்கணக்கான மக்கள் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அனைவரும் வெறுத்து ஒதுக்கிய அந்த அழுக்குத் தரையை அவள் முத்தமிட்டாள், எட்டிக் காயாக கசக்கும் சில இலைகளை பறித்து உண்டாள்.

அவள் மண்ணை மும்முறை கையால் தோண்டினாள். சேறும் சகதியுமாய் இருந்த நீரைப் பருகினாள். பின்னர் சேற்றை அள்ளி உடலில் பூசிக்கொண்டாள். மக்களைப் பார்த்து திரும்பினாள். என்ன நடக்கிறது? மக்கள் அவளை பைத்தியக்காரி என்று எள்ளி நகையாடினர். அவர்களால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

கடவுள் தாழ்ச்சியின் சின்னமாக விளங்குகிறார். அவர் உலகத்தின் மேல் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார் என்றால் தன் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். அந்த கடவுளின் பிறப்பு பாடுகள், துன்பம் ஆகியவற்றைக் குறித்தே அவள் அவ்வாறு செய்தாள் என்று மசபியேல் காட்சி குறித்து ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் எந்த நாட்டுக்குச் சென்றாலும் முதன் முதலாவதாக அந்த நாட்டின் மண்ணில் முழந்தாளிட்டு முத்தமிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்படியான தாழ்ச்சியே சிறுமியிடமும் இருந்தது.

பழைய ஏற்பாட்டு யூதர்களிடம் இருந்த ஒரு வழக்கம், கடவுள் எல்லா பாவங்களையும் கசப்பையும் தன்னில் ஏற்றுக்கொண்டார் எனக் காட்டுவதற்காக, அவர்கள் ஒரு செம்மறியைக் கொன்று சுத்தப்படுத்தி அதனுள் கசப்பான இலைதழைகளை வைத்து ஒப்புக்கொடுப்பர். இதோ இறைவனின் செம்மறி, இவரே உலகின் பாவங்களை தன்னில் ஏற்றுக்கொண்டவர் என்று சொல்லி ஜெபிப்பர். அவள் கசப்பான இலைதழைகளைத் தின்றாள் என்றால் அதற்கு காரணம் இதுவே.

## வற்றாத ஊற்று பொங்கிப் பாய்ந்தது

மாசி 25 ஒன்பதாம் நாள் காட்சியின் போது கன்னி மரித்தாய், கெபியின் பின்புறத்தைக் காட்டி "நீ ஊற்றின் அருகில் செல், அதில் பருகி உன்னைத் தூய்மையாக்கு" என்றார்.

அப்போது அவள் செயல்பட்ட விதம் ஏதோ ஒன்றை விடுவிப்பது போல் பார்வையாளருக்குக் காணப்பட்டது. புற்களாலும் சேறாலும் மூடி இருந்த இடத்தை தோண்டி அந்தக் குட்டையில் ஆரம்பத்தில் சேறு கலந்த சிறிதளவு நீரே இருந்தது. சிறிது சிறிதாக அது தெளிவடைந்த தூய நீராகியது. பிறகு அது பேரூற்றாகப்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## புனித ஜோன் பொஸ்கோ

ஜனவரி 31



புனிதத்திற்கான சூத்திரத்தை நான் உங்களுக்கு வழங்க விரும்புகிறேன்

**முதலில்** மகிழ்ச்சியாக இருங்கள்;

**இரண்டாவது** படியுங்கள்; மற்றும் செபியுங்கள்.

**மூன்றாவது** அனைவருக்கும் உதவி செய்யுங்கள்




A. நாகுக் ஷ்வாரி. 10ம் வகுப்பு. சுவாமி விபுலாநந்தர் மகா வித்தியாலயம்



M. அபிலாஷ். 7ம் வகுப்பு, சுவாமி விபுலாநந்தர் மகா வித்தியாலயம்.

# மறைக் கல்வி அறிவோம்

## தூய ஆவியானவர்



**01. தூய ஆவியாரின் கனிகள் எத்தனை உண்டு? அவை யாவை?**

- தூய ஆவியின் கனிகள் பன்னிரண்டு உள்ளன. அவை;

பரம அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, இரக்கம், நன்னயம், சகிப்பு, சாந்தம், விசுவாசம், அடக்க ஒடுக்கம், இச்சையடக்கம், நிறை கற்பு.

**02. தூய ஆவிக்கு நாம் எவ்வாறு மதிப்புகொடுக்க வேண்டும்?**

- தந்தைக்கும், திருமகனுக்கும் தூய ஆவியானவருக்கும் நாம்அன்புடன் ஆராதனை செய்திட வேண்டும். அத்தோடு எப்போதுமே அவனது ஒளியை வேண்டி மன்றாடவும், அவருடைய வழிகாட்டுதலில் நடக்கவும் வேண்டும்.

### I) கத்தோலிக்க திருச்சபை.

**1) கத்தோலிக்கத் திருச்சபை என்பது யாது?**

- திருமுழுக்கு பெற்றவர்கள், ஒரே மறையுண்மையினால் பிணைக்கப்பட்டவர்களாய், ஒரே அருட்சாதனங்களைப் பெற்றவர்களாய், ஒரே திருப்பலியை ஒப்புக்கொடுப்பவர்களாய், கிறிஸ்துவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவராகிய திருத்தந்தையின் கீழ் இயங்கும் இறைமக்கள் சமூகமே கத்தோலிக்கத் திருச்சபை எனப்படுகிறது.

**2) கிறிஸ்து நம் கத்தோலிக்க திருச்சபையை ஆரம்பித்தது எவ்வாறு?**

- அவர் பன்னிரண்டு திருத்தூதர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு மறையுண்மைகளை கற்பித்து உலகெங்கும் சென்று அதனை பறைசாற்ற ஆணையிட்டார். அவர்களில் சீமோன் பேதுரு என்பவரைத் தலைவராக நியமித்து, மானிட மீட்பின் செயற்பாட்டிற்கான அனைத்து அதிகாரங்களையும் அவரிடம் ஒப்படைத்துத் திருச்சபையை நிறுவினார்.

**ஞான ஒளி**

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**மாசி 10ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.




## விவிலியப் பகுதி



### நற்செய்தி : புனித மாற்கு

### அதிகாரம் – 10

168. மோசேயின் சட்டம் என்ன?

169. இயேசு கட்டளை குறித்து கூறியது என்ன?

170. படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் மனிதனை எப்படி படைத்தார்?

171. அதனால் கணவன் யாரை விட்டு விட்டு தன்மனைவியுடன் ஒன்றித்திருப்பான்?

172. யார் ஒரே உடலாய் இருப்பார்கள்?

173. எனவே கடவுள் இணைத்ததை யார் பிரிக்காதிருக்கட்டும் என்றார்?

174. தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும்அவருக்கு எதிராக விபச்சாரம் செய்கிறான் என யார் யாரிடம் கூறியது?

175. யாரை விலக்கிவிட்டு வேறொருவரை மணக்கும் எவளும் விபச்சாரம் செய்கிறாள்?

176. சிறு பிள்ளைகளை யார் தொடவேண்டுமென்று சிலர் கொண்டு வந்தனர்?

177. சீடர்கள் யாரை அதட்டினார்கள்?

15ம் பக்கம் தொடர்ச்சி

## வர்ணம் தீட்டுங்கள்



# திருப்பலி

எலிசபெத் போர்த்துக்கல் நாட்டின் இளவரசி. அரச சபையிலே ஒரு இளைஞன் நல்லொழுக்கமும் மிகச் சிறந்த பக்தியும் நிறைந்தவனாக இருந்தான். இவனுடைய இந்த சீரிய குணத்தினால் இளவரசிக்கு இவர்மீது ஒரு தனி அன்பு இருந்தது. இந்த அன்பை சகிக்க முடியாதவனாய், அரண்மனையிலிருந்த இன்னொரு பணியாள் அரசனிடம் இவனைப்பற்றி தப்பான முறையில் குறை சொல்லிக் கொண்டிருந்தான்.

அரசனும் இந்த பணியாளனின் சூதான பேச்சை நம்பிவிட்டான். இதனால், இளவரசியின் நட்பை சம்பாதித்திருந்த நல்லொழுக்கமுள்ள பக்தியான இளைஞனைக் கொல்ல ஒரு ஏற்பாடு செய்தான். நகருக்கு வெளியே அரசனுக்குச் சொந்தமான ஒரு நெருப்பு சூளை இருந்தது. நெருப்புச் சூளையின் நிர்வாகிக்கு அரசன் ஒரு ஆணை கொடுத்து அனுப்பினார். ‘நாளை அதிகாலையில் யார், அங்கு வந்து அரசன் சொன்னப்படி செய்ய வேண்டுமாம்” என்று சொல்லுகிறார்களோ அவனை மறுபேச்சின்றி நெருப்பு சூளையில் வீசிவிடு” என்பது தான் அந்த ஆணை. மறுநாள் அதிகாலையில் நல்ல இளைஞனை நெருப்புச் சூளைக்கு அரசன் அனுப்பினான். போகும் பாதையில் ஒரு ஆலயத்தில் திருப்பலி நடந்து கொண்டிருந்தது உடனே இளைஞன் ஆலயத்தினுள் சென்று பக்தியுடன் திருப்பலியில் பங்கெடுத்தான். இதற்கிடையில் அரசன் பொறுமையிழந்தவனாய் அடுத்த வாலிபனை செய்தி அறிவதற்காக நெருப்புச் சூளை இருந்த இடத்திற்கு அனுப்பினான். ஆனால், இதுவரை முதல் இளைஞன் திருப்பலி முடிந்து அவ்விடம் வந்து சேரவில்லை. இதனால் இந்த வாலிபன்தான், அரசன் குறிப்பிட்டவன் என எண்ணி, அவனை பேசவும் விடாமல் நெருப்புச் சூளையில் தூக்கி வீசிவிட்டார்.

நல்ல இளைஞன், திருப்பலி முடிந்து மெதுவாக அவ்விடம் வந்து, அரசன் சொன்னபடி, செய்ய வேண்டுமாம், எனக் கூறியபோது, செய்து விட்டேன் எனப் பதில் வந்தது. இவன் அரசனிடம் போய் செய்தியை தெரிவித்த போது அரசன் அதிர்ச்சி அடைந்தான்.

பொறாமை கொள்ளாதே. புறணி பேசாதே! திருப்பலி நம்மை பல ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுகிறது.

**நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்: பொல்லாரின் வழியோ அழிவைத் தரும்**

(தி.பா.1:6)

## மாணவர் ஒளி





# இதோ இயேசு என்ற மனிதன்

## உன்னோடு ஒரு நிமிடம்

அன்பினால் உந்தப்பட்டு என் மகன் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அவரின் வாழ்வில் அன்புதான் முக்கியமான இடம் வகித்தது.

என் மகன் மக்களை அன்பு செய்து வாழ்ந்தார். மக்களால் அன்பு செய்யப்பட்டார். மக்களை அன்பு செய்து வாழ்வதையும், மக்களால் அன்பு செய்யப்பட்டு வாழ்வதையும் தம் அனுபவங்களில் அறிந்து கொண்டார். என் மகன் இயேசுவின் நண்பர்களான இலாசர் மார்த்தா மரியா ஆகியோர் மீது அன்பு கொண்டிருந்தார்.

பணக்கார இளைஞனை உற்று நோக்கி அவரை அன்பு செய்தார். ஏழையரையும் ஒடுக்கப்பட்டோரையும் விபச்சாரரையும் பாவிகளையும் அன்பு செய்தார். என் மகன் குழந்தைகளை மிகுதியாக அன்பு செய்தார். தம் அன்பைப் பல வழிகளில் மனிதர்களிடம் வெளிப்படுத்தினார். கரிசனையோடு செவிகொடுத்தார். மக்களோடு நேரத்தைச் செலவிட்டார். திருமணங்களிலும் இறப்பிலும் கலந்து கொண்டார். தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

**உடைந்து போய் விடாதே நண்பா!**

ஊதாரி மைந்தன், விபசாரத்தில் பிடிபட்ட பெண் காணாமல் போல ஆடு, உடல் ஊனமுற்றோர், மனதளவில் பாதிக்கப்பட்டோர் பார்வையற்றோர், முடவர்கள், பாவிகள் போன்றவர்கள் மட்டில் தன் அன்பை வெளிக்காட்டினார்.

மக்களோடு கொண்டிருந்த அன்புறவை நற்செய்தியை வாசிப்பவர்களால் புரிந்து கொள்ள இயலும். என் மகன் இயேசுவின் அன்பு தம் நண்பர்களுக்காக உயிரைத் தருகின்ற அன்பு உயர்ந்த அன்பு அதைவிட உயர்ந்த அன்பு வேறு யாரிடமும் இல்லை. அன்பே என் மகனை இவ்வுலகிற்கு அழைத்து வந்தது, அவர் அன்புக்காக இறந்தார். அனைத்துக் கட்டளைகளிலும் அன்பை முதன்மைப்படுத்தினார்.

அன்பே அவருடைய திருச்சட்டம் அன்பே அவரது அடித்தளமும் ஆணிவேரும் அன்பே அவரது ஆட்சியும் அடிப்படைக் கொள்கையும்.

தொடரும்

# ஆர்வத்தை வளர்ப்பது எப்படி?

ஆர்வத்தோடு செய்யாத எதுவும் உண்மையில் பயனுள்ளதாய் இருக்காது. வாழ்வில் உவகை ஏற்படவேண்டுமா, அல்லது வாழ்வுக்கு பெருமகிழ்ச்சி ஊட்டவேண்டுமா? எமக்கு ஆர்வம் வேண்டும். ஆர்வம் எமது வாழ்வின் விழுமியங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நாம் எந்தக்காரணத்திற்காக இரந்து கேட்கிறோமோ, அல்லது எந்தப் பொருளை விற்கிறோமோ அவற்றில் காட்டும் ஆர்வத்திலிருந்து எமக்கு எவ்வளவு ஈடுபாடுள்ளது என்று மற்றவர்கள் கண்டு கொள்வார்கள்.

எமது பிரச்சனைக்கு எவ்வளவு ஆர்வத்தை ஏற்படுத்துகின்றோம் என்பதல்ல மாறாக ஆர்வத்தை ஏற்படுத்தும் சூழலைக் கண்டு கொள்வதே. இது பல ஆக்கக்கூறுகளின் கிளை விளைவே. அவற்றில் சிலவற்றை இங்கு ஆராய்வோம்.

### 1. அறிவு :

ஒரு பொருளில் எமக்கு இருக்கும் ஆர்வம் அல்லது கவனம் அப்பொருளைப்பற்றி நமக்கிருக்கும் அறிவுக்கு ஒத்திசைவானது. ஒரு விற்பனையாளரை எடுத்துக்கொண்டால், புதிய பொருட்களை விற்பனை செய்வது அல்லது பழைய பொருட்களை புதிய சந்தையில் விற்பனையாக்குவது. இதில் எதையும் நன்றாகச் செய்யுமுன், அப்பொருளைப்பற்றிய நல்ல அறிவு இருக்கவேண்டும். கூடிய அறிவு அதிக ஆர்வத்தைத் தூண்டும். எவ்வளவுக்கு அப்பொருளைப்பற்றியோ அதன் பயன்பாடுபற்றியோ அறிந்திருக்கிறாரோ அவ்வளவுக்கு அதைப்பற்றி விளம்பரப்படுத்த ஆவலாய் இருப்பார்.

### 2. சவால் நிறைந்த சூழல்கள் :

வெற்றியடைவதற்கான ஆர்வத்தை தூண்டும் உணர்ச்சி, முனைப்புள்ள அறிவைப் பெறுவது எளிதல்ல. ஏனென்றால் அவற்றைப்பற்றிச் சிந்திக்காமல், வாடிக்கையாகச் செய்யும் பொழுது அது புதியதாகவோ, ஆர்வத்தைத் தூண்டுவதாகவோ இருந்தாலும்கூட சொற்ப பலனையே தரும். வாழ்க்கை துணிச்சலை வேண்டிநிற்குமொன்று. அது தரும் சுவை சவால்களுக்கு முகம்கொடுப்பதாலேயேயொழிய அவற்றிலிருந்து தப்பியோடுவதாலல்ல. ஆர்வம் கடினமானவற்றையும் மகிழ்ச்சி நிறைந்ததாக்கும்.

### 3. தன்மானமும் தனிப்பட்ட ஆற்றலும்:

எமக்கு மனித ஆளுமைபற்றிய சரியான உணர்வு இருந்தால் எமது வாழ்விலும் செயல்பாட்டிலும் இந்த ஆளுமையைப் பேணுவதற்கு முழு சக்தியையும் பயன்படுத்துவோம். மனித ஆளுமையை வளப்படுத்தவும் வலுப்படுத்தவும் ஒன்றைச் செய்யும்போது புதிதாக ஒன்றைச் செய்வது உவகையூட்டுவதும் மனநிறைவு தருவதுமாக இருக்கும். துணிச்சலாக ஒன்றைச் செய்யும்போது ஏமாற்றமோ மனவுடைவோ வருவது இயல்பு. உண்மையான அக்கறையோடு நாம் ஒன்றைச் செய்யும்போது வெறும் திருப்தி, முன்னேற்றத்தை நாம் பெறுவதுமாத்திரமல்ல. எமது ஆளுமையும் கட்டியெழுப்பப்படுகிறது.

### 4. சமூகநிலை :

ஒரு மாணவன் தன்னுடைய அறையிலிருக்கும் ஒரு விடயத்தைப்பற்றி தனிப்பட்ட விதத்தில் மகிழ்ச்சியடையலாம். ஆனால் அவ்விடயத்தையும் அவ்விடயம் பற்றிய தனது அறிவு, விருப்பம் என்பவற்றைத் தன் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது அம் மகிழ்ச்சி பன்மடங்காகிறது. விளையாட்டில் ஆர்வமுள்ள ஒருவர் தனது அபிமான வீரனின் சுயவரலாறு பற்றி வாசித்து ஆனந்தமடையலாம். ஆனால் அவன் ரசிகர் கூட்டத்திலிருக்கும்போது தான் மகிழ்ச்சியால் கூச்சலிடுவான். பலவிதமான அறிவு சார்ந்த சந்தர்ப்பங்கள், சவால் நிறைந்த சந்தர்ப்பங்கள், தனிப்பட்ட ஆற்றலும், சமூகத்தொடர்புகள் என்பவற்றைச் சந்திக்கும்போது எமது ஆர்வம் வளர்வதற்கான விளை நிலத்திற்கு நாம் உரமிடுகிறோம்.



அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.




10.12.1948 அன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனம் ஒவ்வொரு மனித உயிருக்கும் என்னென்ன உரிமைகள் உண்டு என்று பட்டியல் போட்டிருக்கிறது. பட்டியல் இதோ!

**வேலை செய்யும் உரிமை!**
**உணவு பெறும் உரிமை!**
**வாக்களிக்கும் உரிமை!**
**சமத்துவ உரிமை!**
**கருத்தை வெளியிடும் உரிமை!**
**கல்வி பெறும் உரிமை!**
**இயக்கமாகச் சேரும் உரிமை!**
**சமய உரிமை!**
**குடியுரிமை!**
**சட்டத்தின் பின் சம உரிமை!**
**சுதந்திரமாக வாழும் உரிமை!**
**பயணம் செய்யும் உரிமை!**
**உயிர்வாழும் உரிமை!**
**உடல் நலம்பேணும் உரிமை!**
**சொத்துரிமை!**
**பெண் சமத்துவ உரிமை!**
**விரும்பியவரை மணந்துகொள்ளும் உரிமை!**
**பாதுகாப்புடன் வாழும் உரிமை!**
**சித்திரவதைக்கு உட்படாமல் வாழும் உரிமை!**

நம் நாட்டில் இத்தனை உரிமைகள் எங்கே இருக்கிறது என்று நொந்துபோய்ச் சிரிக்காதீர்கள்!

சமுதாய விழிப்புணர்வு வளர, வளர, நமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளும் வாய்ப்புக்களும் வளரவேண்டும்.

நமது உரிமைகளை உணர்ந்து போராடி அவற்றை நிலைநாட்டிக் கொள்ள வேண்டியது நம் பொறுப்புத்தான்.

**சட்டம் நமக்குப் பல உரிமைகளைத் தந்திருக்கிறது. நாம் ஒன்றுபடுவதால், சமூகத்தை ஒன்றுபடுத்துவதால்தான் அதைக் காக்க முடியும்.**

# கண்டு, நம்பிய சீடரின் நற்செய்தி

## திருத்தந்தையின் நூல்




கானா திருமண விருந்தில், தண்ணீர் திராட்சை இரச மாக மாறியதைக் கண்ட திலிருந்து, அன்புச் சீடர் யோவானின் நம்பிக்கைப் பயணம் தொடங்கியது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றபின், திருத்தூதர் யோவானின் நற்செய்தி-யிலிருந்து அவர் பகிர்ந்து கொண்ட கருத் துக்களைத் தொகுத்து, நூல் ஒன்று, தை 21, செவ்வாயன்று வெளியானது.

யோவான் - **கண்டு, நம்பிய சீடரின் நற்செய்தி** என்ற தலைப்பில் வெளி யாகியிருக்கும் இந்நூ-லை, வத்திக்கான் பதிப்ப-கமும், புனித பவுல் பதிப்பகமும் இணைந்து வெளியிட்டுள்ளன.

### காணுதல், நம்புதல் – முக்கிய வினைச் சொற்கள்:

காண்பதும், நம்புவதும் இரு முக்கியமான வினைச் சொற்கள் என்று கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கானா திருமண விருந்தில், தண்ணீர் திராட்சை இரசமாக மாறியதைக் கண்டதிலிருந்து, அன்புச் சீடர் யோவானின் நம்பிக்கைப் பயணம் தொடங்கியது என்றும், பல்வேறு குணமளிக்கும் நிகழ்வுகள், ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மக்களின் பசியை நீக்கிய நிகழ்வு, தன் நண்பர் இலாசர் உயிர்பெற்று கல்லறையிலிருந்து வெளியேறியது என்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்ட, அன்புச் சீடர் யோவான், தான் கண்டதை நம்பினார் என்று, இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஆழ்ந்து தியானிக்க உதவும் நூல்

வந்து பாருங்கள் என்று இயேசு விடுத்த அழைப்பை ஏற்று, அவரைப் பின்பற்றிய அன்புச் சீடரான யோவான் பதிவு செய்துள்ள உண்மைகளை ஆழ்ந்து தியானித்து பயனடைய இந்நூல் பெரும் உதவியாக இருக்கும் என்று, இந்நூலின் பதிப்பாசிரியரும், சலேசிய துறவு சபையின் அருள்பணியாளருமான ஜியான்பிராங்கோ வெந்தூரி (Gianfranco Venturi) அவர்கள், தன் அணிந்துரையில், இந்நூல், யோவான் நற்செய்தியின் ஆய்வு விளக்கமாக இல்லாமல், வாசித்தல், தியானித்தல் என்ற இருவழிகளில் நம்மை அழைத்துச் செல்லும் நூலாக அமைந் துள்ளதெனவும் கூறியுள்ளார்.

### மௌனத்தில்பிறந்த நூல்

நான்காவது நற்செய்தி, ஆழ்ந்த மௌனத்தில் பிறந்தது என்று, யூத மெய்யியலாளர் André Chouraqui அவர்கள் கூறியுள்ளதற்கு ஏற்ப, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ஆழ்ந்த அமைதியில், இந்நற்செய்தியிலிருந்து திரட்டிய கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார் என்று, மேலும் குறிப்பிட்டுள்ளார். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரின் நற்செய்திகளைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள், இதுவரை, மூன்று நூல்களாக வெளிவந்துள்ளன என்பதும், தற்போது, நான்காவது நூலாக, யோவான் நற்செய்தியின் கருத்துக்கள் வெளிவந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



**பேறுபெற்ற சீடர் திமொத்தேயுவின் உடல் அமைதியில் உறங்குகிறது**

இறைவார்த்தை ஞாயிறன்று புனித திமொத்தேயுவின் திருப்பொருள்கள் சனவரி 26, ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் ”முதல் இறைவார்த்தை ஞாயிறு” திருப்பலியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பேராலயத்தில் நிறைவேற்றினார்.

1945ம் ஆண்டில், இத்தாலியின் தெர்மோலி நகர் பேராலயம் சீரமைக்கப்பட்டபோது, அங்கு புனித திமொத்தேயுவின் திருப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பளிங்கு கல்லறைக் கல்லால் மூடப்பட்டிருந்த இப்பொருள்களின் மேல்,

**“இங்கே, பேறுபெற்ற திருத்தூதர் திமொத்தேயுவின் உடல் அமைதியில் உறங்குகிறது”**

என பொறிக்கப்பட்டிருந்தது.

## கர்தினால்கள் அவையின் புதிய தலைவர், கர்தினால் ரே

கர்தினால் ஜொவான்னி பத்திஸ்தா ரே அவர்கள், 2000மாம் ஆண்டு முதல், 2010ம் ஆண்டு வரை ஆயர்கள் பேராயத்தின் தலைவராகப் பணியாற்றியவர் கர்தினால்கள் அவைத் தலைவராக, கர்தினால் ஜொ வான்னி பத்திஸ்தா ரே அவர்களும், அதன் துணைத் தலைவராக, கர்தினால் லெயோனார்தோ சாந்த்ரி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் ஒப்புதலை வழங்கியுள்ளார். இத்தாலியரான கர்தினால் ஜொவான்னி பத்திஸ்தா ரே (30,சன.1934) அவர்கள், 2001ம் ஆண்டில் கர்தினாலாக உயர்த்தப்பட்டார்.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரம் நிறைவுற்றது

**அவர்கள் எங்களிடம் மிகுந்த மனித நேயத்துடன் நடந்து கொண்டனர்**

தை 18ம் திகதி முதல் 25ம் திகதி வரை கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரம் நிறைவுற்றது.

கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரத்தின் நிறைவு நாளான, தை 25, சனிக்கிழமையன்று, உரோம் புனித பவுல் பேராலயத்தில் மாலை வழிபாடு நடத்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த ஆண்டு தை 18ம் தேதி, கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செபிக்கும் 52வது வாரத்தின் தொடக்க நிகழ்வாக, உரோம் புனித பவுல் பெருங்கோவிலில், பிரிந்த கிறிஸ்தவ சபைகளின் பிரதிநிதிகளுடன் மாலை வழிபாட்டை தலைமையேற்று நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிற கிறிஸ்தவ சபைகளின் உறுப்பினர்களுக்கு கடவுள் வழங்கியுள்ள கொடைகளை அங்கீகரிக்குமாறு கேட்டிருந்தார்.

**நம்பிக்கையுள்ளவர்கள், கடவுளின் தேவையை மிக அதிகமாக உணர்வார்கள் மற்றும், நம் இயலாமையில், அவரில் முழு நம்பிக்கை வைத்து சரணடைவோம்**

என்ற சொற்களை வெளியிட்டுள்ளார்.



## வத்திக்கானிலிருந்து திருத்தந்தை

## 13 புதிய மறைசாட்சிகள் அருளாளர்களாக...



**அருளாளர் மற்றும், வணக்கத்துக்குரியவர் நிலைகளுக்கு உயர்த்துவதற்கென, புண்ணிய நற்பண்புகளைக் கொண்ட, 13 மறைசாட்சிகள் மற்றும் இத்தாலி, இஸ்பெயின், மெக்சிகோ, பிரான்ஸ், பிரேசில் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து இறைஊழியர்களின் புண்ணிய வாழ்வு தொடர்பான ஆவணங்களை வெளியிடுவதற்கு, திருத்தந்தை அனுமதியளித்துள்ளார்**

அருளாளர் மற்றும், புனிதர் நிலைகளுக்கு உயர்த்தும் பணிகளையாற்றும் திருப்பீட பேராயத் தலைவர், கர்தினால் ஆஞ்சலோ பெச்சு அவர்கள், சனவரி 23, இவ்வியாழனன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருப்பீடத்தில் சந்தித்து, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்தார்.

## தூய ஆவியின் அருளால் நாம் மாற்றப்பட அனுமதிக்கும்போது, உண்மையான மனமாற்றத்தின் பாதை தொடங்குகின்றது

கடவுளில் இணைவதற்கு நம் தனிப்பட்ட முயற்சி போதாது வாழ்வை மாற்றியமைப்பது கடினமாவதற்கு காரணம், இம்மாற்றத்திற்குரிய முயற்சிகள், கிறிஸ்துவையும், தூய ஆவியாரையும் சார்ந்திராமல், தனிமனிதரைச் சார்ந்திருப்பதேயாகும். அது தற்பெருமை உணர்வுக்கு இட்டுச்சென்றுவிடும், மாறாக, இயேசுவின் நற்செய்திக்கு நம் இதயத்தையும் மனதையும் திறந்தவர்களாக நாம் செயல்படவேண்டும்

பனிமூட்டத்துக்கிடையே ஊடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்த வெளிச்சம் போன்றது இயேசுவின் போதனை என, இஞ்ஞாயிறு மூவேளை செப உரையில் குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நல்மனம் படைத்த அனைவருக்கும் மனம் திரும்பலுக்குரிய அழைப்பை இயேசு விடுப்பதை, இறைமகன் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்வின் பின்னணியில் தெளிவாக புரிந்து கொள்ளமுடிகிறது என்று கூறி சுயநலப் பாதைகளை விட்டுவிலகி, மனந்திரும்பி வருவதன் முக்கியத்துவத்தை நினைவூட்டினார்.

பலவேளைகளில், சுயநலப் பாதைகளையும், தீமைகளையும், பாவத்தையும் விட்டு விலகி வாழ்வை மாற்றியமைப்பது கடினமாகிறது என்றுரைத்து இம்மாற்றத்திற்குரிய முயற்சிகள் கிறிஸ்துவையும், தூய ஆவியாரையும் சார்ந்திராமல், தனிமனிதரை சார்ந்திருப்பதே அதற்குரியக் காரணம் என சுட்டிக்காட்டினார்.

இவ்வுலகையும், இதயங்களையும், மாற்றவல்ல கிறிஸ்துவின் நற்செய்தியில் நம்பிக்கைக்கொண்டு, இறைத்தந்தையின் விருப்பத்திற்கு நம்மை திறந்து, தூய ஆவியின் அருளால் நாம் மாற்றப்பட்ட அனுமதிக்கும்போது, உண்மையான மனமாற்றத்தின் பாதை தொடங்குகின்றது என, மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

**நம்மீது கொண்ட அன்பால், நம்மை தேடி வந்த இறைவன், நமக்கு வாழ்வின் அழகையும், இதய அமைதியையும், மன்னிப்பிலும், அன்புணர்விலும் கிட்டும் மகிழ்வையும் தரவந்தார். இறைவனோடு வாழும் வகையில், நம் வாழ்வு மாற்றமடைய வேண்டும் என இறைவன் விரும்புகிறார்.**

**நம் வாழ்வை மாற்றியமைத்து இருளிலிருந்து நம்மை ஒளி நோக்கி அழைத்துச் செல்லும் வல்லமையுடைய இறைவார்த்தை, நம்மை, சுயநலம் எனும் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கிறது.**

**இறைவனின் மீட்பளிக்கும் வார்த்தை, நம் வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் புகுந்து தன் செய்தியை வழங்க முயல்கிறது, ஆனால், நாம் தான், நம் குழப்பங்களையும், இருளையும் நமக்குள்ளேயே வைக்க விரும்பி, கதவுகளை மூடிக்கொள்கிறோம்.**

**திருத்தந்தை பிரான்சிஸ்.**



475வது ஆண்டு நிறைவில்...

# மன்னார் மறைசாட்சிகள்

08

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

சரித்திர வரலாறு

### 3.2. வேதசாட்சிகள் தொகை

மன்னார் வேதசாட்சிகள் பற்றி அனேகமாக வெளியிடப்பட்ட வரலாற்றுச் சான்றுகளின் படி மன்னார்த்தீவில் வேதசாட்சிகளாக மரித்தவர்களின் தொகை 600க்கும் 700க்கும் இடைப்பட்டதாக இருக்கும் என நம்பப்படுகின்றது. புனித சவேரியார் தொகையை குறிப்பிடவில்லை. ஆனால் அவர்களில் *'பலர்'* என குறிப்பிட்டுள்ளார். அன்று டி சூசா என்பவர் யாழ்ப்பாண அரசன் 700 பேருக்கு சற்று அதிகமான கிறிஸ்தவர்களைக் கொன்றார் எனக் குறிப்பிடுகின்றார். யுவான் டி பெயிறா மன்னார் வேதசாட்சிகளின் தொகை 700 பேர் என்று குறிப்பிடுகின்றார்.

இந்திய மறையறிவிப்பாளர்கள் யாழ்ப்பாண அரசன் புதுக்கிறிஸ்தவர்களான 600 பேரைக் கொல்லும்படி போர்வீரர்களை அனுப்பினார் என குறிப்பிட்டுள்ளனர். மற்றும் அருட்தந்தை மே.வெவ்றே 600 வேதசாட்சிகள் கொல்லப்பட்டனர் என்றும் குறிப்பிடுகின்றார். எவ்வாறு இருப்பினும் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் கொல்லப்பட்டார்கள் என்று சொல்ல முடியாது. அன்றிக் அன்றிக்கஸ் என்ற இயேசு சபைக் குருவானவர் சங்கிலியனின் கொடுமைகள் இடம்பெற்ற போது பலர் பெருநிலப்பரப்பிற்கு (மாதோட்டம்) தப்பியோடினர் என்றும் வேதசாட்சிகளாய் இறந்தவர்களைத் தவிர பெருநிலப்பரப்பிற்கு தப்பி யோடியவர்கள் தங்களது உறவினர்களுடன் மீண்டும் பட்டிமுக்கு வந்தனர் எனறு கூறுகின்றார் (அன்றிக அன்றிக்கஸ் கடிதம் 1561). ஆகவே திருமுழுக்குப் பெற்ற எல்லோரும் கொல்லப்படவில்லை என்பது உறுதியாகின்றது. எனவே 600 தொடக்கம் 700க்கு உட்பட்ட மன்னார் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வேதசாட்சிகளாக மரித்தனர் என வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்ள வாய்ப்புண்டு.

### 3.3. சரித்திர நிகழ்வு இடம்பெற்ற காலம்

மன்னார்த்தீவில் வேதசாட்சிகள் 1544ஆம் ஆண்டு மரித்தனர் என்று எல்லா வரலாற்று ஆசிரியர்களும் ஐயப்பாடின்றி தெளிவாக கூறுகின்றனர். பல வரலாற்று ஆசிரியர்கள் பலவிதமான கருத்துக்களை முன்வைத்திருந்தாலும் மூல நூல்களாக அமையும் புனித சவேரியாரின் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இச்சரித்திர நிகழ்வு 1544ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்திற்கும் அதே ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்றது என கொள்ளலாம்.

1544ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21ஆம் திகதி புனித பிரான்சீஸ் சவேரியார் மன்சில்காஸ் அடிகளாரை மன்னார்த்தீவிலுள்ள கரையாபட்டாவோ என்னும் இடத்தில் இருக்கும் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு அனுப்ப எண்ணியிருந்தார். (Perniola :1989: 49) ஆனால் அது கைகூடவில்லை. புனித பிரான்சீஸ் சவேரியார் திருவாங்கூரில் முக்குவ சமூகத்தவர்களை மதம் திருப்பிக் கொண்டிருந்தபடியால் 1544ஆம் ஆண்டு ஐப்பசி மாதம பிரான்சீஸ் சவேரியார் என்ற திருத்தொண்டரை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். (Antoninus: 1944:19) அதன்பின் புனித சவேரியார் 1544ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ஆம் திகதி மீண்டும் மன்சில்காஸ் அடிகளாருக்கு எழுதும் போது யாழ்ப்பாண அரசனுக்குத் தண்டனை வழங்குவது பற்றி குறிப்பிடுகின்றார். ஆகவே 1544ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதிக்கு முன் வேதசாட்சி மரணம் நடந்து விட்டது எனலாம். யாழ்ப்பாண வைபவ மாலையின் படி கருவருசம் ஆடி மாதம 18ஆம் திகதி நடந்த நிகழ்வு என குறிப்பிடப்பட்டுள்ளது. (Brito : 33) இது 1544ஆம் ஆண்டு கார்த்திகை பிற்பகுதியில் அல்லது மார்கழி தொடக்கத்தில் நடந்திருக்க வேண்டும். இதை ராயன்ன என்ற இந்திய வரலாற்று ஆசிரியர் ஏற்றுக் கொள்கின்றார். (Rayanna : 1964:44)


வரலாற்றுக் குறிப்புக்கள் இவ்வாறு இருக்க இச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வேதசாட்சி மரணம் எத்தனையாம் திகதி நடந்தது என்று ஒரு குறிப்பிட்ட நாளை எவரும் சுட்டிக்காட்டவில்லை ஆனால் இச் சம்பவம் புனித சவேரியாரின் கடிதங்களைச் சான்றாகக் கொண்டு 1544ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்திற்கும் மார்கழி மாதத்திற்கும் இடையே நடைபெற்றது எனலாம்.

தொடரும்.....

# மகப்பேறு, குழந்தை நலம் பற்றி மகப்பேறு மருத்துவர்

**ஒரு வீட்டில் குழந்தை பிறக்கப்போகிறது என்றால் அந்தத் தாய்க்கு மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த குடும்பத்திற்கே அது மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும். அப்படி இருக்கும் பட்சத்தில் அந்தத் தாய் எந்த மாதிரியான உணவு முறைகளைப் பின்பற்ற வேண்டும்?**

பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது அவர்களை நாம் சந்தோசமாக பார்த்துக்கொள்ள வேண்டும். என்ன கஷ்டமாக இருந்தாலும் முடிந்தவரை அவர்களிடம் அதைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. சரியாக உணவு எடுத்துக் கொள்கிறார்களா? என்று பார்க்க வேண்டும். காலையில் எழுந்ததும் குமட்டல், வாந்தி, தலைசுற்றல் இருக்கும். உணவு உட்கொள்ள கடினமாகத் தோன்றும். அவர்களுக்கு இளநீர், சாத்துக்குடி, பழங்கள் கொடுக்கலாம். எண்ணெய் உணவுகளைத் தவிர்க்கவும். சோர்வாக இருப்பார்கள். அவர்களை அன்பாகப் பார்த்துக் கொண்டாலே குழந்தை ஆரோக்கியமானதாக இருக்கும்.



அவர்களைச் சுற்றிய சூழல் மிக முக்கியம். மனதளவில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். Happy Mother brings out a Happy child என்று சொல்வார்கள். குழந்தையின் மூளை வளர்ச்சி முதல் ஐந்து மாதங்களுக்குள் நடை பெறுவதால் முதல் ஐந்து மாதம் அந்தப் பெண்ணை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**எந்தவித அறிகுறிகளை வைத்து குழந்தையின் வளர்ச்சியை தாயால் உணர முடியும்?**

மாதவிடாய் தள்ளி போகும்போதும், வாந்தி, குமட்டல் இருக்கும்போதும் பெண்கள் மருத்துவரை போய் பார்க்க வேண்டும். இப்பொழுது வீட்டிலேயே Card Test எடுக்கிறார்கள். மார்பு கனமாக இருந்தாலும் அது ஆரம்ப நிலை அறிகுறியாகவும் கருதலாம். வயிறு இழுத்துப் பிடிக்கும். வெள்ளைப்படுதல் அதிகமாக இருக்கும். இவையெல்லாம் இயல்பாக இருக்கும் அறிகுறிகள். இரத்தப் போக்கு ஏற்பட்டால் மருத்துவரை சென்று பார்க்க வேண்டும்.

**கருவுற்ற பெண்களுக்கு சில நேரம் பற்களின் ஈறுகளில் இருந்து இரத்தம் வருகிறதே... அது எதனால் வருகின்றது?**

இதற்குப் பயப்பட வேண்டாம். வைட்டமின் சத்து குறைவாக இருப்பதால் ஏற்படுவதுதான் இது. இப்பொழுது அதிகமாக ஏற்படுவதில்லை. காரணம் முதல் மாதம் முதலே நல்ல கவனத்துடன் தாய் மற்றும் சேய் இருவரையும் கவனித்துக்கொள்கிறோம். Folic Acid, B-Comlex போன்ற மருந்துகள் கொடுக் கிறார்கள். கீரை உணவு களையும் எடுத்துக் கொள்ளலாம்.

**குழந்தை பிறந்த பின்பு தாயும் சேயும் எந்த மாதி ரியான உணவு முறைகளைப் பின்பற்ற வேண்டும்?**

குழந்தை பிறந்தவுடன் சர்க்கரை தண்ணீர் கொடுப்பதைத் தவிர்க்கவும். முதல் ஐந்து நாட்களுக்குள் குழந்தை மஞ்சளாக மாறும். அது மாறவில்லை என்றாலும் குழந்தையை சூரிய வெளிச்சத்தில் காட்ட வேண்டும்.



அந்த வெளிச்சம் குழந்தையின் தோலைக் காக்கும். மஞ்சள் காமாலை வராமலதடுக்கும். அப்படியே வந்தாலும் அந்த மஞ்சள் காமாலை யைக் குறைக்கும் சக்தி சூரிய வெளிச்சத்திற்கு இருக்கிறது. காலை மற்றும் மாலை 15 நிமிடங்கள் முன்னும் பின்னும் குழந்தையை சூரிய வெளிச்சத்தில் திருப்பிக் காட்டி விட்டு அதன் பின்பு குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும். தடுப்பூசிகளில் கவனம் செலுத்த வேண்டும். எப்படி குழந்தையை குளிப்பாட்ட வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிறோம். முதல் ஆறு மாதங்களுக்கு கண்டிப்பாக தாய்ப்பால் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் கொடுப்பதால் பெண்கள் சத்தான உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**குழந்தைகளுக்கு தண்ணீர் எப்பொழுது கொடுக்க ஆரம்பிக்கலாம்?**

முதல் ஒரு மாதம் முழுவதும் தாய்ப்பால் தான் தரவேண்டும். முப்பது நாட்கள் கழித்து தண்ணீர் கொடுக்கலாம். B-Complex Vitamin, D3 drops அதாவது சொட்டு மருந்து கொடுக்கிறார்கள். அந்தச் சொட்டு மருந்தை தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். பெண்கள் பழங்கள், தண்ணீர் அதிக அளவு எடுத்துக்கொள்ள வேண்டும். பழங்கள் நிறைய சாப்பிட்டால் இரத்தம் நன்றாக உற்பத்தியாகும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்

# ஆலயம் அறிவோம்...




# கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல வரலாறு

இலங்கையில் எத்தனையோ இடங்களில் தூய அந்தோனியார் பெயரால் ஆலயங்கள் இருப்பினும் கொழும்பு கொச்சிக்கடை, தூய அந்தோனியார் திருத்தலம் ஒரு தனி சிறப்பும் கவர்ச்சியும் கொண்டதாக விளங்குகின்றது. மனித சமுதாயத்துக்கு இன, மத, மொழி வேறுபாடு இன்றி இறைவனின் அருளைப் பெற்றுதரும் மத்திய நிலையமாகத் தலைநகரின் நடுநாயகமாக இத்திருத்தலம் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தை நோக்கி செவ்வாய்க்கிழமை தோறும் அணி அணியாக வந்து சேரும் பக்தர்களில் பலதரப்பட்டோர் உளர். குடும்ப நலம், உடல் நலம், மன நலம், ஆன்ம நலம் ஆகிய பல்வேறு நன்மைகளைத் தேடி ஒடி வரும் அடியவர்களைத் தூய அந்தோனியார் ஒரு போதும் வெறும் கையோடு அனுப்புவதில்லை. இத்திருத்தலத்தின் சிறப்பு ஒரு சுவையான வரலாறு. இறைவனின் புகழ்பாடும் ஒரு அழகிய கவிதை.

தூய அந்தோனியார் பக்தியானது 1505ல் இலங்கையில் போர்த்துக்கேயர் வந்த காலம் தொட்டுத் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையைக் கிரேக்கர் 'தப்ரோபேன்" என்றும் அராபியர் 'செரண்டிப்' 'செரண்டிப்பிட்டி" என்றும் போர்த்துக்கேயர் 'செயிலானோ' என்றும் அழைத்தனர். இதிலிருந்துதான் கொழும்பு என்ற பெயர் உருவானது. அதேபோல் களனி கழிமுகத்துக்கு மேல் இருந்த துறையைக் 'கொலோன் தோட்ட' எனவும் அழைத்தனர். களனி ஆற்றிக்கு மேலிருக்கும் துறைமுகம் என்பதே இதன் கருத்தாகும். பின்னர் இது'கொல அம்பதோட்ட' அதாவது இலைகள் நிறைந்த மாமரங்கள் இருக்கும் துறைமுகம் என்று பொருள்படும் பெயரால் அழைக்கப்பட்டது. 14ம் நூற்றாண்டில் இத்துறைமுகம் 'கொலம்தோட்ட' என்று அழைக்கப்பட்டது. இங்கு தான் களனி ராசதானிக்கு உட்பட்ட துறைமுகம் காணப்பட்டது. இத்துறைமுகத்தில் தான் களனி திஸ்ச அரசனால் அவனது மகன் விகார மகாதேவி கடற் கொந்தளிப்புக்குப் பரிகாரமாகக் கடலில் விடப்பட்டாள். அங்கிருந்து அம்பாந்தோட்டையில் உள்ள கிரிந்த என்ற துறைமுகத்தில் கரை ஒதுங்கிய அவளைக் காவந்திஸ்ச என்ற அரசன் மணமுடித்தான். அவர்களுக்கு பிறந்த மகன் தான் துட்டகைமுனு என்ற வரலாற்றுக்குக் காரணமானதும் இத்துறைமுகம் தான். போர்த்துக்கேயர் காலத்தில் கொலோன் தோட்டத்தில் வாழ்ந்த மக்கள் குறிப்பாக துறைமுகத்தை அண்டிய பகுதியில் வாழ்ந்த மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திலும் இறைபக்தியிலும் உறுதியுடன் திகழ்ந்தார்கள்.

ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனிகள் போர்த்துக்கேயரைத் தோற்கடித்து போர்த்துக்கேயரின் பிடியிலிருந்து இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் கத்தோலிக்க மக்களின் இறை விசுவாசத்தை இல்லாதொழிப்பதற்காகச் சட்டங்களை இயற்றிக் குருக்களையும் நாடு கடத்தினர். அது மட்டும் அல்லாது தமது ஒல்லாந்தச் சீர்திருத்தச் சபை என்ற ஒரு மதத்தைப் பரப்ப முயற்சித்தனர். ஆனால் கத்தோலிக்க மக்களின் இறைபக்தியை இவர்களால் ஒன்றும் செய்ய இயலாது போனது. இந்தியாவில் கொச்சினிலிருந்து இந்த நாடு கடத்தல் செய்தியைக் கேள்விப்பட்ட யோசப்வாஸ் அடிகளார் 1687ல் இலங்கையில் குருத்துவப் பணி செய்ய புறப்பட்டு வந்தார். இங்கு வந்து யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி ஆகிய இடங்களில் தமது இறை பணியை ஆற்றினார். தியான சம்பிரதாய சபையை சேர்ந்த யோசப்வாஸ் அடிகளாரைத் தொடர்ந்து அருட் தந்தை அந்தோனியோ அடிகளார் கொச்சினிலிருந்து இலங்கை வந்தார்.

தற்பொழுது உள்ள பிலிப்பு நேரியார் ஆலயத்தின் பின் பகுதியில் (மெலிபன் வீதியில்) மீனவர்கள் வாடி போன்று சிறு குடிசைகள் அமைத்து அங்கு தங்கியிருந்தனர். இவரும் இங்கு வந்து ரெக்கிளமேசன் வீதியை அண்டிய முகத்துவாரத்தை நோக்கிய பகுதியில் தனது இருப்பிடத்தை அமைத்து கொழும்பை அண்டிய பகுதிகளில் தமது குருத்துவப் பணிகளை நிறைவேற்றினார். இவ்வட்டாரத்தில் ஒல்லாந்தரின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. இதனால் அந்தோனியோ அடிகளாரின் இறைபணியை இலகுவில் அவர்கள் அறிந்து கொண்டார்கள். தருணம் பார்த்து அடிகளாரைக் கைது செய்வதற்குஒல்லாந்துப் படைவீரர்கள் முயற்சிசெய்தனர். இதனை முன்கூட்டியே அறிந்துவிட்ட அடிகளார் அங்கிருந்து தப்பித்து ரெக்ளமேசன் வீதி ஊடாக முகத்துவாரத்தை நோக்கி விரைந்தார். இப்பகுதியில் மீனவர்கள் அதிகமானனோர் உலரவைத்திருந்த மீன்பிடி வலைகளையும் நனைத்து ஒரு கை பார்த்தன. கடலின் சீற்றத்தைக் கண்டு பயந்த மீனவர்கள் அவ்வழியே வந்த அந்தோனியோ அடிகளாரிடம் கடல் கொந்தளிப்பிலிருந்தும் கடலரிப்பிலிருந்தும் தம்மைக் காப்பாற்றச் செபிக்குமாறு வேண்டினார்கள். மீனவர்களின் வேண்டுதலை ஒல்லாந்தப் படைகள் ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தனர். அதுமட்டும் அல்லாது அடிகளாரின் செபம் பலிக்காமல் போகும்போது மீனவர்களே அடிகளாரை அடித்து விரட்டுவார்கள் எனச் சிந்தித்து மறைந்திருந்து நடப்பவற்றை அவதானித்தனர்.

தொடரும்

## புனித தொன்பொஸ்கோ இளைஞர்களின் பாதுகாவலர் *இம்மாத புனிதர் ஜனவரி 31*

பொது நன்மைக்-காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொ-ருவரிலும் வெளிப்படுகிறது (வெளி 12:7) இளைஞர்களைத் தம் வசப்படுத்தும் ஆற்றல் பெற்ற தொன் பொஸ்கோ, இத்தாலி நாட்டின் வட பகுதியில் உள்ள ட்யூரின் நகருக்கு அருகில் அமைந்திருக்கும் பெச்சி என்ற இடத்தில் 1815. ஆவணி 16இல் பிறந்தார். இவரின் பெற்றோர் பிரான்சிஸ் பொஸ்கோ மற்றும் மார்க்கிரேட் ஒச்சி. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து அன்னையின் அரவணைப்பும், தந்தையின் கடின உழைப்பும் மெருகூட்ட வளர்ந்தவர் தொன் பொஸ்கோ ஏழ்மையிலும் ஆனந்தம் பொங்க வாழ்ந்த வேளையில் மூன்று மகன்களையும், மனைவியையும் விட்டுவிட்டு பிரான்சிஸ் பொஸ்கோ இறையடி இணைந்தார். பிள்ளைகளை வளர்க்கவும், நல்ல நிலைக்குக் கொண்டு வரவும் மம்மா மார்கிரேட் (சாலேசியர்கள் இப்படித்தான் அன்பொழுக அழைக்கிறார்கள்) மிகுந்த துயரத்தை அனுபவித்தார். சிறுவனாக இருந்தபோதே கயிற்றில் நடப்பதும், சக குழந்தைகளுடன் நகைச்சுவை நாயகனாக வலம் வருவதுமாக இருந்த தொன்போஸ்கோவிற்கு கல்வி ஞானம் நிறைய இருந்தது. நன்கு படித்து குருவானவராகப் பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது. ஆனால் அதற்கான எந்த வசதியும் இல்லாமல் படிக்க முடியாமல் அல்லலுற்றார். இதை அறிந்த குரு ஒருவர் தொன் பொஸ்கோவை ஊக்கப்படுத்தினார். எழுதவும், வாசிக்கவும் கற்றுக்கொடுத்தார். பலரின் உதவி மற்றும் அன்னையின் உந்துதல் அனைத்தின் பயனாகப் படிக்க ஆரம்பித்தார். 1835இல் குருமடத்தில் சேர்ந்தார். ஆறு ஆண்டுகள் பயிற்சி பெற்றபிறகு 1841 ஆனி ஆறாம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அருட்தந்தை தொன்பொஸ்கோ ட்யூரின் நகருக்கு அனுப்பப்பட்டார். அங்கே தொன் பொஸ்கோ என்னும் அருள்பணியாளருடன் இணைந்து சிறைச்சாலை சந்திப்பிற்குச் செல்லும் பணியும் இவருக்கு இருந்தது. சிறையில் இருந்த இளைஞர்களைக் கண்ணுற்றார். இளவயதில் அவர்கள் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்களை ஆய்ந்தறிந்தார். இளைஞர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதல் பெற்றார். இளைஞர்களுக்காக மனமகிழ் மன்றங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். வீதியோர சிறுவர்களையும், இளைஞர்களையும் அழைத்து வந்து அன்புடன் நெறிப்படுத்தினார். இந்த அன்பு முறை அவர்களுக்கு புதிதாக இருந்தது. அதுவரை அடிக்குப் பயந்து திருந்த முயன்றவர்கள் அல்லது திருந்துவது போல நடித்தவர்கள் முதன்முறையாக உளமாற அன்புக்கு அடிபணிந்து திருந்த ஆரம்பித்தார்கள். அங்கேயே அவர்களுக்கு பாடம் நடத்துவதற்காக பலர் தன்னார்வத்துடன் கரம் கொடுத்தார்கள். நாளடைவில் மாணவர்-களின் எண்ணிக்கை அதிகரித்தது. எனவே வேறோர் இடம் தேட ஆரம்பித்தார். இந்நிலையில் ரி.'புஜியோ என்ற இடத்திற்கு உதவிப் பணியாளராக தொன் பொஸ்கோ சென்றார். அங்கு தொன்போரெல் என்ற ஆர்வலர்தொன் பொஸ்கோவுடன் இணைந்துகொண்டார். இருவரும் திட்டமிட்டு பேராயரின் அனுமதியுடன் புனித பிரான்சிஸ் சலேசியார் இல்லம் ஒன்றை ஆரம்பித்தார்கள். இப்புனிதரை தனது பாதுகாவலராகவே தொன்பொஸ்கோ ஏற்றுக் கொண்டு மன்றாடி வந்தார். இங்கும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமானது. அவர்க-ளின் இன்பக்குரலொலியை சத்தம் என்றும் தொந்தரவு என்றும் கருதிய பலர்தொடர்ந்து எதிர்த்தார்கள். அனைத்தையும் இறைவனின் அருள்துணையுடன் தாங்கிக்கொண்டு பணியாற்றினார். பிறகு மற்றோர் இடத்திற்கு தமது இல்லத்தை மாற்றினார். வளமில்லாத பூமி அது. 700 மாணவர்கள் இருந்த அந்த இடத்தில் வசதிகள் மிகக் குறைவாகவே இருந்தன. ஆனாலும் இளைஞர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்தபடியே இருந்தது. இந்நிலையில் தொன் பொஸ்கோவின் தாய் மம்மா மார்க்கிரேட் உதவிட முன் வந்தார் தமது கடைசி 10 ஆண்டுகள் மகனுடன் இருந்து இளைஞர்களுக்கான இப்பணிக்கு தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும், வழி காட்டுதல்களையும்



செய்தார். இவர்களின் பணி மனதுக்கு நிறைவாக

15ம் பக்க தொடர்ச்சி....

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI

## 01 குருத்துவ வாழ்வில்...

திருப்பொழிவு செய்யப்பட்டு இறைவனின் திராட்சைத் தோட்ட ஊழியனாகினார். அருட் தந்தை தனது வைரவிழாவைக் கொண்டாடும் இக்காலத்தில் இவர் சேவையாற்றிய காலத்தில் பல இளைஞர்கள் இவரின் வாழ்வை மையமாகக் கொண்டு வாழ்ந்து மாத்திரமல்ல, பங்கு இளைஞர்கள் 42பேர் அருள்பணியாளர்களாக சேவையாற்ற தம்மை அர்ப்பணித்தார்கள் என்பது நோக்கும்போது இவர் இறைவனுடனும் மக்களுடனும் கொண்ட அன்பின் தன்மை வெளிப்படுகிறது. இவரின் திராட்சைத் தோட்ட ஊழியத்தின் வைர விழா நன்றி திருப்பலி நாகொடை பங்கில் 2020ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 02ம்திகதி காலை 8.00 மணிக்கு அவரின் பங்களிப்புடன் ஒப்புக்கொடுக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திருப்பலியில் கலந்து நன்றி கூற விரும்புபவர்களை அன்புடன் அழைக்கிறோம்.

## 04 கலாநிதி அருட்தந்தை...

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பாலி, பௌத்த கல்வித்துறை தலைவர் பேராசிரியர் மாகம்மன பஞ்ஞானந்த தேரர், கலாநிதி அருட்தந்தை பேனாட் சாந்த அடிகள் ஆகியோராவர்.

கடந்த சில வருடங்களில் இடம்பெற்ற ராகிங் காரணமாக பல்கலைக்கழகத்தைவிட்டுச் சென்ற மாணவர்களை இனங்கண்டு மூன்று மாத காலத்திற்குள் அவர்களை பல்கலைக்கழகத்திற்குள்வாங்க இக்குழுவினரால் பரீட்சித்து பரிந்துரை செய்யப்படும்.

## 14 புனித தொன்பொஸ்கோ...

இருந்ததால் நகர நிர்வாகமே முன்வந்து இவர்களுக்காக ஒரு தொழிற் பள்ளிக் கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்தது. தாம் முன்னெடுத்த பணிகளை தொடர்ந்து ஆற்ற ஆண்களுக்கு சலேசிய சபையையும், பெண் துறவிகளுக்காக மேரி மசரெல்லா என்னும் புனிதையின் துணையுடன் கிறிஸ்தவர்களின் சகாயி மரியின் புதல்வியர் சபையையும் தோற்றுவித்தார்.

தண்டனை இல்லாத கல்வி முறை, யாரையும் வருத்தாத நெறிமுறை நேசமுடன் பழகும் பாங்கு போன்றவற்றால் இளைஞர்களின் மனம் நிறைந்த தொன்பொஸ்கோ 1888, தை 31இல் இறந்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1929 ஆனி 2ஆம் திகதி அருளாளராக அறிவித்தார். அவரே, 1934, சித்திரை முதலாம் திகதி புனித நிலைக்கு உயர்த்தினார்.

காணுகின்ற காட்சிகள் அனைத்தும் ஏதோ ஒரு செய்தியை நமக்குள் விதைக்கின்றன. அதனை கண்டுகொண்டால் நாமும் பலரை மீட்க முடியும்.

## 10 விவிலிய வினா விடை

168. மோசே மணவிலக்கு சான்றிதழ் எழுதி அவரை விலக்கிவிடலாம் என்று அனுமதி அளித்துள்ளார் (10:4)
169. உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே அவர் இக்கட்டளையை எழுதி வைத்தார் (10:5)
170. ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் (10:6)
171. தன் தாய் தந்தையை (10:7)
172. கணவனும் மனைவியும் (10:8)
173. எனவே கணவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் (10:9)
174. இயேசு சீடர்களிடம் (10:11)
175. தன் கணவனை (10:12)
176. இயேசு தொடவேண்டுமென்று (10:13)
177. சிறு பிள்ளைகளை (10:13)

**வாசகர்களே! இம்மாதம் 26ம் திகதியுடன் தவக்காலம் ஆரம்பமாகின்றது. எனவே உங்களது ஆக்கங்கள், கட்டுரைகள், சித்திரங்கள் இப்பத்திரிகையில் இடம்பெற வேண்டுமானால் எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**

**மின்னஞ்சல் :**

**cgnanaoli@yahoo.com**

எமது இணையத்தள முகவரி

http://www.colomboarchdiocesancatholicpress.com




## மணமகன் தேவை

றோமன் கத்தோலிக்கம், 1991ல் பிறந்து கொழும்பில் வசிக்கும் நன்கு படித்த பெண்பிள்ளைக்கு படித்த நல்ல தொழில் புரியும் நல்ல குடும்பத்தை சேர்ந்த மணமகன் தேவை

**தொடர்புகளுக்கு :**

**072 6830381, 011 2931254**

(56024)


## 03 இயேசுவைக்...

என்ற உறுதி அந்த நேரம் இறைவனுக்கு கொடுக்கப்படுகின்றது. இதை இன்றைய நாளில் திருச்சபை நமக்கு நினைவூட்டுகின்றது. குழந்தைகளை வளர்க்கும் விதத்தில் பெற்றோர் ஒளியாக இருக்க வேண்டும். குடும்பத்தில் இறையாட்சியை கட்டவேண்டும். கிறிஸ்துவின் ஒளியாக இருந்து பெற்றோர்கள் பிள்ளைகளை இயேசுவின் சாட்சியாக வாழ பயிற்றுவிக்க வேண்டும். பிள்ளைகளும் மற்ற பிள்ளைகளுக்கு ஒளியாக இருக்க வேண்டும். பெற்றோருக்கும் குடும்பங்களுக்கும் ஒளியாக அமைய வேண்டும் என்பதையே இன்றைய ஒளிவிழா நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

## 13 மகப்பேறு குழந்தை...

மலச்சிக்கல் வராது. இரவு ஒரு டம்ளர் பால் குடிக்கலாம். காய்கறிகள், முளைக்கட்டிய பயிர் வகைகளை எடுத்துக்கொடுக்கலாம்.

**சுகப்பிரசவம் ஆக என்னென்ன வழிகளைப் பின்பற்றலாம்?**

சுகப்பிரசவம் குறைய காரணம் நாமும் நம் வாழ்க்கை முறையும்தான். முன்பெல்லாம் வீட்டில் நிறைய வேலைகள் செய்தோம். இன்று அந்த வேலையை மெஷின், மிக்ஸி, கிரைண்டர்கள் செய்கின்றன. உடல் உழைப்பு மிக முக்கியம். இரண்டு கால்களை நீட்டி உட்கார வேண்டும். இன்று நாற்காலியில் உட்காருகிறோம். கீழே உட்கார்ந்து எழும்பும்போது அது ஒரு வகையான உடற்பயிற்சிதான்.

7 மாதங்களுக்குப் பின்பு 25 நிமிடங்கள் கட்டாயம் உடற்பயிற்சி செய்ய கற்றுத் தருகிறோம். பிரசவக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய உடற்பயிற்சிகளைச் சொல்லித்தருகிறோம். அவற்றைப் பின்பற்ற வேண்டும். 2-3 முறை மூச்சுப்பயிற்சி செய்ய வேண்டும். இடது புறம் ஒருக்களித்து படுக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு குறைந்தது. 4-5 லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும்.

**பிரசவத்திற்கு முன்னும் பின்னும்பெண்களுக்கு ஏற்படும் மன உளைச்சலை எப்படிப் போக்குவது?**

குழந்தை இல்லாதவர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால், கருவுற்ற பின் மன உளைச்சல் ஏற்படுவது அரிது. தாய் 50% அவர்கள் உடனிருப்பவர்கள் முக்கியமாக அவரது கணவர் 50% அந்தப்பெண்ணை மகிழ்ச்சியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். பயம் இருக்கும் அந்தப் பயத்தை மருத்துவர் அல்லது வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். மருத்துவர்கள் அவர்களிடம் நண்பர்களாகப் பழகுவதால் மன உளைச்சல் ஏற்பட வாய்ப்பு இல்லை.

**கருக்கலைத்தல் இயற்கையாக நடக்கும் பட்சத்தில உடல் நலத்தை எப்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும்?**

நாமாக கருவைக் கலைத்தால் அது சட்டப்படி குற்றம். இயற்கையாக நடந்தால் உடல் மிகவும் சோர்வாக இருக்கும். மன உளைச்சல் இருக்கும். உடல்நலம் தேற மருந்துகள் தருகிறோம். ஆறு மாதங்கள் இல்லாற வாழ்க்கையில் அடுத்த குழந்தை பற்றி சிந்திக்கக்கூடாது. ஒரு வருடம் கழித்து குழந்தை பெற்றால் நல்லது.

**காலம் தாழ்த்தி கருவுறுவதால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன?**

21 வயது திருமணம் செய்ய சரியான வயது. திருமணம் தாமதமாக நடைபெற்றால் கருவுற்றலும் தாமதமாக நடைபெறும். 25 வயதுக்கு மேல் முட்டைப் பையில் நீர்க்கட்டி வர வாய்ப்பு உள்ளது. மாதவிடாய் சரியாக வராது. நாட்களும் குறையும். அதிக உடல் பருமனாக இருக்கக் கூடாது. உணவு முறைகளைச் சரியாகக் கையாள வேண்டும். எண்ணெய், கொழுப்புத்தன்மை கொண்ட உணவுகளைப் பின்பற்றக் கூடாது. சரியான வயதில் திருமணம் செய்தால் குழந்தை பிறந்த பின்பு அவர்களோடே சேர்ந்து நாமும் மகிழ்ச்சியாக வாழலாம்.

நன்றி அன்னை வேளாங்கண்ணி!

## 08 சுபோதி...

- ❖ பாடநெறிகள் ஒரு நாளுக்கானதாக அல்லது அதற்கு மேலான நாட்களுக்கானதாக அமையலாம்.
- ❖ தேவைக்கேற்ப தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியாகப் பாடநெறிகள் நடைபெறும்.
- ❖ அனைத்து வகைப் பாடநெறிகளும் அவற்றுக்குப் பொருத்தமான குழு நிகழ்வுகள், பயிற்சிகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்றவற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும்.
- ❖ சமய ரீதியான வழிபாடுகள், தியானங்கள் போன்றவை சுபோதி நிகழ்ச்சிகளுக்கு ஆன்மீகப் பரிமாணத்தை வழங்கும்.
- ❖ தெரிவுசெய்யப்படும் உணவுப் பட்டியலுக்கேற்ப ஆகாரங்களும் தேனீர் மற்றும் சிற்றுண்டிகளும் வழங்கப்படும்.
- ❖ தங்குமிட வசதிகள் தெரிவு செய்யப்படும் வகைக்கேற்ப வழங்கப்படும்.
- ❖ பங்குபற்றுவோரின் பாதுகாப்பும் மனத்திருப்தியும் உறுதி செய்யப்படும்.

சுபோதி கல்வி நெறிகளின் பூரண பயன்களைப் பெற்று மகிழ உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : சுபோதி நிர்வாகக்குழு**

## 09 மசபியேல் அரசி...


பெருகியது. இந்தச் செயலால் இயேசுவின் திரு இருதய இரக்கப் பெருக்கம் என்ற மறையுண்மை புலப்பட்டது. சிலுவையில் தொங்கிய இயேசுவின் விலாவில் படைவீரன் ஒருவன் ஈட்டியால் குத்தினான். அதில் இருந்து தண்ணீரும் இரத்தமும் பீறிட்டுப் பாய்ந்தது. "நான் உனக்கு தரும் தண்ணீர் ஒரு சுனையாக உன்னில் பெருக்கெடுத்து பாய்ந்தோடி நித்திய வாழ்வின் வாய்க்காலாக விளங்கும். புல்லும் சேறும் பாவத்தால் காயப்பட்ட மனித இதயத்தைக் குறிக்கிறது. ஆனால் அந்த இதயத்தின் ஆழத்தில் சுனையாக விளங்குவது நித்திய தேவனின் ஜீவன்" என்று சொல்லாமல் விளக்கினார் அன்னை.

### தவம் தவம் தவம்

ஆயிரக்கணக்கான மக்கள் குழுமி இருந்தபடி பெர்னதெத்தை கவனித்துப் பார்த்தனர். அந்த காட்சிக்குப் பிறகு சிலர் அவளிடம் கேட்டனர். "அந்தப்பெண் உனக்கு ஏதோ சொன்னதாகத் தெரிந்து கொண்டோம், அது என்ன?" அப்போது அவள் சொன்னாள் "பரிகாரம், பரிகாரம், பரிகாரம் பாவிகளுக்காக செபம்!" என்றாள். தவம் என்பது மனமாற்றத்தைக் குறிகின்றது. அதாவது நமது இதயங்கள் இறைவனை நோக்கியும் அயலானை நோக்கியும் திரும்ப வேண்டும். ஜெபம் நம்மை கடவுளின் ஆன்மாவை நோக்கித் திருப்புகிறது. அதில் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. பாவம் கடவுளின் அன்புக்கு எதிரானது. இதுவே நற்செய்தி நூல் முழுவதும் சொல்லப்படுகிறது. 13வது காட்சி நடைபெற்றது பங்குனி 2ல், "நீ குருவானவரிடம் போ, அவர்கள் இங்கு அணியாக திரளட்டும். இங்கே எனக்கொரு சிற்றாலயம் கட்டும்படிச் சொல்" என்று மாமரி அன்னை அவளுக்கு சொன்னார். கூட்டத்தோடு கூட்டமாக ஒரு குருவும் அங்கிருந்தார். காட்சி முடிந்ததும் காதரின் என்ற பெண்மணி மாதா காட்சி கொடுத்த கெபியின் அருகில் சென்றாள். எலும்பி பிறழ்ந்திருந்த கையால் நீரூற்றைத் துழாவினாள். அந்நேரமே அவள் கை சுகம் பெற்றது. அதன் இயக்கம் சரியானது எந்தக் குளிர் காலத்திலும் மலராத மஞ்சள் ரோஜா அந்த கடுமையான குளிரிலும் கெபியில் பூத்து மலர்ந்தது. பெர்னதெத் கையில் வைத்திருந்த எரியும் மெழுகுவர்த்தியின் தீச்சுடர் அவள் கையையும் ஆடையைத் தொட்டுக்கொண்டே இருந்தது. ஆனால் அவளைத் தீ தீண்டவில்லை. உடனே ஒரு மருத்துவர் அவள் கையை சோதித்துப் பார்த்தார். அதில் எந்த வித தீக்காயமும் உண்டாகவில்லை. இப்படி பல அருங்குறிகள் அங்கு காணப்பட்டன.

### நாமே அமல உற்பவம்

மாதா கேட்டபடி அங்கு ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. இப்போது ஆயிரம் ஆயிரமாக விசுவாசிகள் அங்கு வந்து வழிபட்டு சுகம் பெற்றுச் செல்கின்றனர். சிற்றாலயம் என்பது திருஅவை நாம் எங்கே இருக்கிறோமோ, அங்கே குடும்பமாக பணிசெய்யும் இடங்களில், நமது பங்கில், மறைமாவட்டத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும் அயலாருடன் கூடி இணக்கமாக தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டு திருஅவையாகத் திகழ வேண்டும். பங்குனி 25 கபிரியேல் தூதர் கன்னி மரியாவுக்கு மங்கள மொழி உரைத்த நினைவு நாளன்று 16வது நாள் காட்சி கொடுக்கப்பட்டது. அப்போதுதான் மசபியேல் குகையில் காட்சி தந்த அன்னை "நாமே அமலோற்பவம்" என்று தன்னை சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படுத்தினார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு திருத்தந்தை 9ம் பத்திநாதர் கன்னி மரியாவை "அமல உற்பவி" என்று பிரகடனப்படுத்தினார்.





அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்





## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்





- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

**பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.**


### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்





| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |






**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்